விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி 17 ஞாயிற்றுக்கிழமை (01.01.2006) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 13




## யாழ்.நகரப் பகுதி நேற்றுக் காலை இராணுவத்தினால் சுற்றிவளைப்பு

### வீடுகளுக்குள் முடங்கினர் மக்கள்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை யாழ்.நகரப்பகுதியைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் தீவிர சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதனால் நேற்றுக்காலை யாழ். நகரை அண்டிய பகுதிகளில் பதற்றம் நிலவியதுடன் பொதுமக்கள் பெரும் அச்சத்தில் மூழ்கியிருந்தனர்.பலாலி வீதி ,ஸ்ரான்லி வீதி , கஸ்தூரியார் வீதி ,நாவலர் வீதி உட்பட்ட பகுதிகளிலேயே தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

அதிகாலை வேளையில் இராணுவத்தினர் இத்திடீர்சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததால் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் என பலதரப்பட்டோரும் பெரும் சிரமங்களுக்குள்ளாகினர்.

கல்வி நிலையங்கள் வைத்தியசாலை (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தமிழர் செறிந்து வாழும் பகுதிகளில் பாரிய தேடுதல் வேட்டை

### ஆயிரம் பேர்வரை கைது

(கொழும்பு)

கொழும்பில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட தீவிரதேடுதல்வேட்டையில் தமிழர்கள் 1000 பேர்வரை கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நேற்று நண்பகல் வரை பொலிஸாரும்,இராணுவத்தினரும் இணைந்து கொழும்பு,மருதானை, புறக்கோட்டை, பொறளை ,மோதரை ,உருகொடவத்தை , வெள்ளவத்தை ,மாளிகாவத்தை , வாழைத்தோட்டம் ,கொம்பனித்தெரு தெமட்டகொட ,நாரஹேன் பிட்டி மற்றும் கிறான்பாஸ் உள்ளிட்ட பகுதிகளில் தீவிரதேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

சுமார் 4000 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து இத்தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாக (12 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளின் பதில் கிடைத்ததும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும்

### இந்தியப் பத்திரிகையாளர்களிடம் ஜனாதிபதி

(புதுடில்லி)

விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சு வார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது. அதுகுறித்து விடுதலைப்புலிகளுக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

அதற்கான பதிலை எதிர்பார்த்திருக்கின்றோம். விடுதலைப்புலிகளின் சாதகமான பதில் கிடைத்தவுடன் நேரடிப்பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படும். முதற் சுற்றுப் பேச்சுக்களில் போர் நிறுத்த உடன்படிக்கை குறித்தே கவனம் செலுத்தப்படுமென ஜனாதிபதி கூறியுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## இளம் குடும்பஸ்தர் நேற்று சுட்டுக்கொலை

### உரும்பிராயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு அருகில் வைத்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. வேலை நிமிர்த்தம் மோட்டார் சைக்கிளில் சென்ற பிரஸ்தாப குடும்பஸ்தரை பின்தொடர்ந்து வந்த இருவர் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

வசாவிளான் குட்டியபுலத்தைச் சேர்ந்த யோகலிங்கம் ஜெயசீலன் (வயது 28) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இதேவேளை சம்பவ இடத்திற்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிவான் சரோஜினி இளங்கோவன் விசாரணைகளை (12 ஆம் பக்கம் பார்க்க)

## இணுவிலில் தேடுதல்

(இணுவில்)

இணுவில் பகுதியில் நேற்று மதியம் இராணுவத்தினர் பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். நேற்று முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை இத்தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தேடுதலின் போது பலர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். சிலர்இரா (12 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

பகவான் சாயிபாபாவின் படத்துடன் கூடிய வர்ண நாள்காட்டி இன்றைய வலம்புரியுடன் இணைக்கப்பட்டுள்ளது. கேட்டுவாங்குங்கள்.




# அரச ஊழியர்களின் பணிகள் நாளை முதல் வழமைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த அரசாங்க, வங்கிப் பணியாளர்களின் வேலைப் பகிஷ்கரிப்புப் போராட்டம் இன்றுடன் முடிவடைகின்றது.

நாளை முதல் அவர்களின் பணிகள் வழமைபோல் செயற்படும் என தமிழ்த் தேசிய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இராணுவ அத்துமீறல்களை நிறுத்த வேண்டும்,மக்களது இயல்புவாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து அரச ஊழியர்கள் கடந்த 26ஆம் திகதியில் இருந்து தொடர்ச்சியான வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக நிர்வாகச் செயற்பாடுகள் முழுமையாக யாழ். மாவட்டத்தில் ஸ்தம்பித்தது. இந் நிலையில் மக்களது அன்றாட வாழ்க்கை நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய சூழலில் வேலைப் பகிஷ்கரிப்பை நாளையில் இருந்து விலக்கிக்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக தமிழ்த்தேசிய தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை அரசாங்க மற்றும் வங்கிப்பணியாளர்களுக்கும் பொது மக்களுக்கும் இயல்பு வாழ்க்கை பாதிப்பு ஏற்படுத்தப்படுவது தொடருமெனில், பணியாளர்கள் அவகௌரவப் படுத்தப்படுவார்களாயின் பணிப் புறக்கணிப்பு முழுஅளவில் விரிவு படுத்தப்பட்டு அரசாங்கச் செயற்பாடுகள் அனைத்தும் யாழ்.மாவட்டத்தில் முடக்கப்படும் என்பதனையும் அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் ஆணித்தரமாக கூறிக் கொள்கின்றோம் என கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த நாட்களில மேற்கொள் (12 ஆம் பக்கம் பார்க்க)

உங்கள் காரியாலயத்தில், உங்கள் வீட்டில், நீங்கள் விரும்பிய இடத்தில்

- உலக சுகாதார விதிமுறைகளுக்கமைவான தயாரிப்பு முறை
- அதிநவீன தயாரிப்பு சாதனங்கள் மூலமான இரட்டிப்பு சுத்திகரிப்பு
- இலங்கை தரநிர்ணய உத்தரவாதம் SLS
- உங்கள் வாசல் வரையான இலவச சேவை

மேலதிக விபரங்களுக்கு

SWISS MINERAL

20 லீட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் 210/= மட்டுமே

Head Office
Gbn,posfach
8026 Zurich
Switzerland
Tel+412438259



Factory;
231, Temple Road,
Nallur, Jaffna.
Phone : 222 8122
0773126963

# கருத்தாடல் களம்

## புலிகளுக்கு எதிரான சதி

கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுக்கும் புலிகளுக்கும் சம்பந்தமில்லை. புலிகளை ஐரோப்பிய யூனினும். ஏனைய நாடுகளும் தடைசெய்ய வேண்டும், சர்வதேச சமூகம் புலிகளை தனிமைப்படுத்த வேண்டும் என்பதற்கான ஒரு சதித்திட்டமே இந்த கிழக்கு வன்முறைகளாகும். இதில் அரச படையுடன் இணைந்து செயற்பட்ட கிழக்கு முஸ்லிம் அமைச்சர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்

வே. நிரஞ்சனதாஸ்
பெரியநீலாவணை

## முஸ்லிம்கள் மீது புலிகள் அதிக கரிசனை செலுத்த வேண்டும்

ஆயுத பலமில்லாத காரணத்தினால் முஸ்லிம்களது உரிமைகள் அலட்சியப் படுத்தப்படக்கூடியவையல்ல.
புலிகள் சிங்கள அரசாங்கத்தை விட முஸ்லிம் மக்களது அபிலாஷைகளை புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.
குறிப்பாக புலிகள் முஸ்லிம்களைப்போலவே ஒரு சிறுபான்மை சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதையும் அவர்கள் சிங்கள பெரும்பான்மையால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும், அத்தோடு சிங்கள பெரும்பான்மையால் தாம் பட்ட துன்பங்களை தம்மால் முஸ்லிம்கள் அனுபவிக்கக்கூடாது என்பதில் அவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். இல்லாது விட்டால் சிங்கள பேரினவாதிகளின் செயல்களை புலிகள் நியாயப்படுத்தியதாக அமைந்துவிடும்.

எம்.என். வாஹிம் நௌபர்
அக்கரைப்பற்று

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

### உறுப்புரை - 10

தமது உரிமைகள், கடப்பாடுகள் பற்றியும் தமக்கெதிராகவுள்ள குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் பற்றியும் தீர்மானிப்பதற்கு சுயாதீனமான, நடுநிலை தவறாத நியாய சபையினால் மேற்கொள்ளப்படும் நீதியான பகிரங்கமான விசாரணைக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவராவர்.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

## சமாதான நிகழ்வு

சமாதானம், ஜனநாயகம், நல்லாட்சி தொடர்பிலான மூன்று நாள் பயிற்சி பட்டறை ஒன்று அண்மையில் கண்டியில் இடம்பெற்றது. தென்மாகாண சபையை சேர்ந்த உறுப்பினர்கள், அமைச்சர்களுக்கான இந்த பயிற்சி பட்டறையை தேசிய சமாதான பேரவை ஏற்பாடு செய்திருந்தது. சுமார் 45 உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.



சில விமர்சனங்கள் காலங்கள் கடந்தாலும் நிகழ்காலத்திற்கும் பொருத்தமாக அமைந்து விடுகிறது. அந்தவகையில் இது பத்து வருடங்களுக்கு முன்னதான விமர்சனம்.

## முஸ்லிம்களின் அபிலாஷைகளை முஸ்லிம் காங்கிரஸ் நிறைவேற்றுமா?

கடந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் காலத்தில் குடியேற்றங்கள் இலங்கையின் வட கிழக்கில் பரவலாக நடைபெற்று முடிந்தன. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் அம்பாறை மாவட்டத்தில் குடியேற்றங்கள் திட்டமிட்டு நடந்துள்ளன. இது நடைபெற்ற

### கண்டது.. கேட்டது.. புரிந்தது..

காலத்தில் முஸ்லிம் காங்கிரஸ் பிரேமதாஸ அரசாங்கத்திற்கு நிபந்தனைகளற்ற ஆதரவினை வழங்கியிருந்தது. சில சில நலன்கள் மற்றும் சில அமைச்சுப்பதவிகளுக்காய் குடியேற்றங்களை முஸ்லிம் காங்கிரஸ் கண்டும் காணாததுமாக நடித்தது. அத்துடன் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் அம்பாறை மாவட்டத்தின் பேரை திகாமடுல்ல என்று மாற்றும் வரை முஸ்லிம் காங்கிரஸ் எந்தவொரு எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடாது அமைதியுடன் அவதானித்துக்கொண்டிருந்தது.
இவ்வாறான நடவடிக்கைகளுக்கான பிராயச்சித்தங்கள் புதிய அரசாங்கத்தின் கீழ் முஸ்லிம் காங்கிரஸ் நடாத்தித் தீரும் என்று எதிர்பார்த்தோருக்கு இன்னுமொருமுறை பயங்கர ஏமாற்றம் அனுபவமாய் உள்ளது.
இத்தகைய முஸ்லிம் தேசியத்தை முன்னெடுப்பதில் இவ்வாறான தோல்விகளை பரவலாக அனுபவித்த முஸ்லிம் காங்கிரஸ் அதன் அபிவிருத்தி தொடர்பான கோரிக்கையான "ஒலுவில் துறைமுகம்" அமைப்பதிலும் பின்னடைவுகளையே அனுபவிக்கின்றது. நடைமுறைச்சாத்தியமற்ற ஆனால் தமது முன்னால் அரசியல் எதிரிகளுக்காக முன் வைத்த துறைமுகபிரச்சாரம் பிசுபிசுக்குமளவிற்கு அம்பலமாகியுள்ளது.
அபிவிருத்தி தொடர்பான முஸ்லிம் காங்கிரஸ் திட்டங்கள் தோல்வியடைந்தமையானது முஸ்லிம் தேசியத்தை முன்னெடுப்பவர்களுக்குட்படும் பிரச்சினையாகாது. முஸ்லிம் காங்கிரஸின் தேசியவாத நடவடிக்கைகள் தெளிவான இலக்கற்ற முறையில் சிதைத்துள்ளமையே எமக்கு கவலையைத்தருகின்றது.

- பாத்திமா சாமிரா

முஸ்லிம் காங்கிரஸின் இத்தகைய தோல்விகளை நாம் கவனமாக ஆராய வேண்டும். முஸ்லிம் காங்கிரஸின் வீழ்ச்சி என்பது வேறு முஸ்லிம் காங்கிரஸ் முன்னெடுத்த கோரிக்கைகள் தோல்வி என்பது வேறு என்றே நாம் கணிக்கின்றோம். முஸ்லிம் காங்கிரஸ் முன்னெடுத்த கோரிக்கைகள் தோல்வி பெறுவது என்பது எமக்கு முக்கியமான வினாவினை தோற்றுவித்துள்ளது.
முஸ்லிம் தேசியம் என்பது பிழை இல்லை. அது கட்டாய தேவையுமாகும். முஸ்லிம் காங்கிரஸ் இக்கோரிக்கைகளை வெகுஜனப் படுத்தத்தவறியமை, முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் சந்தர்ப்பவாத வசீகர நடவடிக்கைகள் யாவும் முஸ்லிம் தேசியத்தை சிதைத்துள்ளது என நம்பப்படுகிறது.

நன்றி:- விடிவு(1995)

## விழிப்பின் பதிவுகள்

வலம்புரி

YATV

## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன. அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி
விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713, டிபி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல்முகவரி :- villippu@yatv.net

## அந்த வீட்டில்

அந்த வீட்டில்
இருளும் அழுகையும்

துயர் நிறைந்த முகங்களில்
வாழ்வின் சுமையும்
அரக்கத்தனத்தினால்
பறிக்கப்பட்ட சிரிப்பும்
படர்ந்து

விடுதலைக்காய் போனவர்
திசைமாறி
கரமிருந்த ஆயுதம்
யமனாகி கழுத்தில்
சுருக்காய் இறுக்க
அவர் கண்கள்
நிலைகுற்றாக

அந்த வீட்டில்
இருளும் அழுகையும்

என். ஜீவேந்திரன்

ஏறாவூரில் கொல்லப்பட்ட இரு சகோதரிகளுக்கு அஞ்சலியாக..

## யாழ் வன்முறைகள் போருக்கான பாதையா?

யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற அசம்பாவிதங்களும், வன்முறைகளும் மீண்டும் ஒரு யுத்தத்திற்கான அறிகுறியோ என்ற ஐயத்தினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. தம்மீதான ஆயுத அடக்கு முறைகளுக்கு எதிராக மக்கள் எதிர்ப்பினை தெரிவிப்பது தவிர்க்க முடியாதது. இவ்வாறான எதிர்ப்பு போராட்டங்கள் ஜனநாயக பூர்வமானவை என்பதோடு அவற்றுக்கான மதிப்பை அளிப்பதும் கடமையாகிறது. அதே சமயம் அவற்றை அடக்கு முறையின் மூலம் தடுக்க எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பல சந்தர்ப்பங்களில் புதிய பிரச்சனைகளையும் பாரிய போராட்டங்களையும் ஏற்படுத்தி விடுகின்ற சூழல் கவலைக்குரியதாகும்.
கடந்த நான்கு வருடங்களாக நிலவிய சமாதான சூழல் தற்போது மெல்ல மெல்ல தொடங்கியுள்ளது. தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. பொதுமக்கள் போராட்டங்கள் ஒருபுறம், படையினரின் தாக்குதல்கள் மறுபுறம், படையினர் மீதான தாக்குதல்கள் இன்னொருபுறம் என முடிவின்றி சென்று கொண்டிருக்கின்றன.
இதேவேளை இவ்விதமான மக்கள் போராட்டங்களின் பின்னால் புலிகள் உள்ளதாக சிங்கள தரப்புகள் தெரிவிக்கின்றன. புலிகள் மக்களை படையினருக்கு எதிராக தூண்டிவிட்டு குடா நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதாக அவை தெரிவிக்கின்றன. இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் இருந்து படையினரை வெளியேற்றவும், இன்னுமொரு போரை தூண்டவுமே புலிகளது நோக்கமாக இருப்பதாக அவை குறிப்பிடுகின்றன.
யுத்தத்தினால் வடகிழக்கிலும் ஏனைய பகுதிகளிலும் வாழ்ந்த தமிழ் மக்கள் சொல்லொணாத்துயரங்களுக்கு உள்ளாகியமையை சகலரும் அறிவர்.

- என். ஜீவேந்திரன்

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 12 இலட்சம் வரையிலான மக்கள் இடம்பெயர நேரிட்டது. ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயினர். 7 இலட்சம் கண்ணி வெடிகள் வடகிழக்கில் விதைக்கப்பட்டன. இவ்வாறு வளம் வகை தொகையின்றி அழிவுற்று இளைஞர்களும், மூளைசாலிகளும் நாட்டை விட்டு வெளியேறினர்.
இவ்வாறான இழப்புகளுக்கு மத்தியிலேயே போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டது. வடகிழக்கில் மூடப்பட்டிருந்த பல பாதைகள் திறக்கப்பட்டு, மெல்ல மெல்ல பொதுமக்கள் தமது வாழ்வை சீர்படுத்த தொடங்கியிருந்தனர். வடகிழக்கில் புறக்கணிக்கப்பட்டிருந்த பகுதிகள் அம்மக்களது கடின உழைப்பின் மூலம் ஓரளவாவது அபிவிருத்தியடைய ஆரம்பித்திருந்தன.
இந்த நிலையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமானது வன்முறைகளைதோற்றுவிக்க ஆரம்பித்துள்ளது என்றே கூற வேண்டியுள்ளது. இரு பிரதான தரப்பான அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் இந்த அரசியல் சூழலை எவ்வாறு நோக்குகின்றார்கள் என்பது அவர்களுக்கே வெளிச்சம். ஆனால் பொதுமக்களை பொறுத்தவரையில் இன்னுமொரு போர் ஏற்படக்கூடாது என்ற பிரார்த்தனையில் இருக்கின்றனர். இதுவே இன்றைய யதார்த்தம். மேலும் மக்களால் பிரார்த்திக்க மட்டுமே முடியும்.



## சிங்கள மொழியிலிருந்து சில துளிகள்

### குளிர் காய்கிறோம்.

வீடு எரிகிறது
நாங்கள் கைகளை நீட்டி
குளிர்காய்கிறோம்

குழந்தைகள் அழுகின்றன
பெண்கள் கதறுகிறார்கள்
நெருப்பு நிறைந்து
வீடு எரிகிறது
நாங்கள் கைகளை நீட்டி
குளிர்காய்கிறோம்.

சொத்துகள் அழிந்து
உடமைகள் உதிர்ந்து
உறவுகள் வீழ்ந்து
நட்புகள் நலிந்து
பகை வளர்ந்து
பற்றிப்படர்ந்து
வீடு எரிகிறது
நாங்கள் கைகளை நீட்டி
குளிர்காய்கிறோம்.

நந்தினி ஏக்கநாயக்க

## இவ்வார விழிப்பில்..

தமிழர்களும் பாதுகாப்பு கெடுபிடிகளும்
பொருளாதாரமும் சமாதானமும்
போரும் இடப்பெயர்வும்
குருணாகல் சமாதான நிகழ்வு
சுனாமிக்கு பின் அம்பாந்தோட்டையின் கல்வி நிலை
கலையினூடான சமாதானம்

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி ஐ அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# ஏமாற்றிவிட்ட 2005

## ஜனவரி

01.01.2005 *சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குமுகமாக கொரிய நாட்டு வைத்தியர் குழு யாழ்.வருகை.




03.01.2005 *ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, ஆசிய ஜேர்மன் விளையாட்டு பரிமாற்றத்திட்ட தலைவர் எரிமாடொரிங் மற்றும் ஜேர்மன் நாட்டு மாணவர் குழு யாழ். வருகை.

*கொரிய நாட்டு வைத்தியர் குழு கிளிநொச்சி பயணம்.

*பிரிட்டிஷ் இராணுவக் குழு திருமலை விஜயம்.

*இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் யாழ்.வருகை



05.01.2005 *சுனாமி அழிவுகளைப் பார்வையிடுவதற்காக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க யாழ் . வருகை.



07.01.2005 *உலக சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் லீ. ஜோங் வூக், ஐ.நா. சபை பொதுச் செயலாளர் கொபி அனான், அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கொலின் பவல், கொரிய நாட்டுப் பிரதமர் லிங் சுவாங் குங் ஆகியோர் இலங்கை வருகை.

08.01.2005 *ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார யாழ் வருகை.

09.01.2005 *ஐ.நா.பொதுச் செயலாளர் கொபி அனான் வட பகுதிக்கும் விஜயத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கோரி யாழ். குடா நாட்டில் கவன ஈர்ப்புப் போராட்டம்.

10.01.2005 *வட - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ யாழ். வருகை. யாழ்.செயலகத்தில் அரச அதிகாரிகளுடன் சந்திப்பு.

11.01.2005 *இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் வடமராட்சிக்கு வருகை தந்து சுனாமி அழிவுகளை நேரில் பார்வையிட்டார்.

12.01.2005 *அமைச்சர்களான ரிஷாத் பதியுதீன், ஆறுமுகம் தொண்டமான் ஆகியோர் கிளிநொச்சி விஜயம்.



*கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ஜிம்.ஹரி இயானிங் யாழ்.வருகை. யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பெறுப்பாளர் சி.இளம்பரிதியுடன் சந்திப்பு.

### வலம்புரி நினைவுக் குறிப்பு



13.01.2005 *சர்வதேச நிதி நிறுவனப் பிரதிநிதிகள் குழு கிளிநொச்சி விஜயம். விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.

14.01.2005 *கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் கிளிநொச்சியில் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.



15.01.2005 *உலக உணவுத்திட்டப் பணிப்பாளர் ஜேம்ஸ் மொறிஸ் இலங்கை வருகை.

*ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மிக்கல் பேபியோ, சிறப்புப் பிரதிநிதி மக்லொட் வோங் ரோம் ஆகியோர் கிளிநெச்சியில் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.



17.01.2005 *கனேடிய பிரதமர் போல் மாட்டினுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பு.

*அமெரிக்கப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் போல்வூல் வன் சிங் இலங்கை வருகை.

18.01.2005 *ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைத் தூதுவர் வூட்டர் வில்ரன், நெதர்லாந்துக்கான இலங்கைத் தூதுவர் சுசானா பிளாங் கட் ஆகியோர் கிளிநொச்சியில் சு.ப.தமிழ்ச் செல்வனுடன் சந்திப்பு.

*நோர்வே தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கை வருகை.

19.01.2005 *ஐ.நா.சபை ஆணையாளர் குழு கிளிநொச்சியில் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.

21.01.2005 *நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் ஜனாதிபதி சந்திரிகாவுடன் சந்திப்பு.



*விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கிளிநொச்சி வருகை. புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சந்திப்பு.



22.01.2005 *நோர்வேத் தூதுக் குழுவினர் பிரபாகரனுடன் கிளிநொச்சியில் சந்திப்பு.

*நோர்வேத் தூதுவர் குழுவினர் கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுடன் சந்திப்பு.

26.01.2005 *ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக உயிரிழந்தோரை நினைவு கூருமுகமாக யாழில் தேசிய துக்கதினம் அனுஷ்டிப்பு.

27.01.2005 *அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் முல்லைத்தீவு சென்று சுனாமி அழிவுகளைப் பார்வையிட்டார்.

*அமெரிக்க சமாதானஅமைப்பின் பணிப்பாளர் வெஸ்கி யூஸ் இலங்கை வருகை.

28.01.2005 *கொரிய பிரதிநிதிகள் குழு யாழ்.வருகை.



29.01.2005 *கொரிய பிரதிநிதிகள் குழு யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பெறுப்பாளர் சி.இளம்பரிதியுடன் சந்திப்பு.

30.01.2005 *நெதர்லாந்து அமைச்சர் இலங்கை விஜயம்.

## உலக அரங்கில்

03.01.2005 *இந்திய பாதுகாப்பு ஆலோசகர் கே.என்.டிக்ஷிற் மரணமானார்.

04.01.2005 *பாக்தாத் கவர்னர் அல்கைதாரி தீவிரவாதிகளால் சுட்டுக்கொலை.

*பாலஸ்தீனத்தின் புதிய ஜனாதிபதியாக மஹமுட் அப்பாஸ் தெரிவானார்.



10.01.2005 *சங்கரராமன் கொலை வழக்கில் காஞ்சி காமகோடி பீட இளைய மடாதிபதி விஜேந்திரர் கைது.

15.01.2005 *கர்நாடகாவில் பஸ் விபத்து 57 பேர் பலி 11 பேர் காயம்.

17.01.2005 *சீனாவில் முன்னாள் பிரதமர் ஜாவோ ஜியாங் மரணம்.

18.01.2005 *800 பயணிகளை ஏற்றக் கூடிய உலகின் மிகப் பெரிய போக்குவரத்து விமானம் வெள்ளோட்டம்.

20.01.2005 *அமெ. அதிபராக புஷ் பதவியேற்பு.

26.01.2005 *அசாம் குடியரசு தினவிழாவில் குண்டு வெடிப்பு.

30.01.2005 *ஈராக்கில் தேர்தல்.

31.01.2005 *இந்திய இராணுவத்தளபதியாக ஜெனரல் ஜோகிந்த ஜஸ்வந்சிங் பதவியேற்பு.

(தொடரும்...)

# புதிய ஆண்டில் யுத்த பயம் நீங்கி சமாதானச் சூழல் உருவாகட்டும்

## புத்தாண்டுச் செய்தியில் யாழ். ஆயர்

பிறக்கப்பபோகும் புத்தாண்டில் யுத்தசூழ்நிலை நீங்கி,அசசம் விலகி, ஒற்றுமையுடனும், சமாதானத்துடனும், புரிந்துணர்வுடனும் வாழும்



நிலை உருவாகவேண்டும் என யாழ. ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.அவ்வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2006ஆவது புதிய ஆண்டு புலருகின்ற வேளை இதயம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்களை முதலில் தொிவிக்கிறோம்கடந்த ஆண்டு பேச்சுவார்த்தைகள் வழி சமாதானம் மலரும் என்ற எமது எதிர்பார்ப்பு வெறும் ஏமாற்றமாய் போய்விட்டது. சுனாமி இயற்கை அனர்த்தம்-அதன் பணிகள என்பவற்றோடு காலம் கடந்துவிட்டது.புதிய ஜனாதிபதி சமாதானத்தில் நம்பிக்கையும், பேச்சுக்களைத் தொடரும் ஆர்வமும் உடையவராகத் தம்மைக் காட்டிக் கொண்டாலும் இராணுவத்தினர்க்கும் மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை போர்மயமான சூழலை உருவாக்கியுள்ளது.

பல உயிர் இழப்புக்கள் ஏற்பட்டன. இராணுவத்தினரின் சோதனைச் சாவடிகளில் சோதனை அதிகரிக்கப்பட்டது. இதனால் மக்கள் அதிக துன்பதற்கும் பயத்திற்கும் பதட்டத்திற்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள. யுத்தம வெடிக்கும் என்ற அச்சஉணர்வு மேலோங்கி உள்ளது.

புதிய ஆண்டில் பயமும் பதட்டமும் நீக்கப்படவேண்டும். மக்கள் அச்சம நீங்கி வாழும்நிலை தோன்ற வேண்டும். முறுகல்நிலை- வன் செயல்கள்- உயிர் இழப்புக்கள்-படுகொலைகள் என்பன நீக்கப்பட்டு மக்கள் அமைதியாக பாதுகாப்பாக வாழும் நிலை தோன்ற வேண்டும்.

சகல தாக்குதல்களும் நிறுத்தப்பட வேண்டும். பொதுமக்கள் தாக்குதலுக்கு இலக்காகக்கூடிய செயல்கள் தவிர்க்கப்பட வேண்டும். 2002 ஆம ஆண்டு ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சகல சரத்துக்களும் நிறைவேற்றப்பட வேண்டும். தமிழ மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை உளவாங்கக் கூடிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.புதிய ஆண்டில் சமாதானத்திற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள் என சம்பந்தபபட்ட அனைவர்க்கும் தமிழ் மக்கள பேரால் வேண்டுகோள் விடுக்கிறோம். நாம் அனைவரும் சமாதானத்திற் காக முழுமையாக ஆண்டில் உழைப்போம்

பழையன கழிந்து புதியன புகுந்து பயமும அச்சமும் நீங்கி சமாதானத்தோடும் புரிந்துணர்வோடும் வாழும் நிலை் புதிய ஆண்டில் தோன்ற இறை வரம் வேண்டி புத்தாண்டு நல வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம் எனவும் அதில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (த)

# 2006 ஆம் ஆண்டு எமக்கெல்லாம் இனிய ஆண்டாக அமையட்டும்

பிறக்கப்போகும் புதிய ஆண்டில் எம்மவர் மத்தியில் ஆனந்தமும் அமைதயும் நிலைக்க வேண்டும் என தெல்லைப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர்,க்லாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவ் வாழ்த்துச் செய்தியில் மேலும்,எல்லாம் வல்ல துர்க்காதேவியின அருட்கருணையினால் நாம் வாழ் வாங்கு வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். ஆனந்தமும் அமைதயும் எமமவர் மத்தியில் தோன்றவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம். எமது பிரார்த்தனையினால் இந்த மண் புனிதம் அடையட்டும். அதற்கான அறிவுரை ஒன்றை இங்கே சமர்ப்பிக்கிறேன்.

ஏ, மனமே! நீ முன் ஜென்மத்தில் புண்ணியம் செய்துள்ளதினால் அதுவே இப்பொழுதும் உன்னை மேலும் புண்ணியம் செய்யத்தூண்டுகிறது.புண்ணியம் ஒன்றே நிகரற்றது; புண்ணியத்தைச் செய்; புனிதனாவாய்; புனிதன் என்பவன் யார் என நினைத்தாய்? அவன்தான் ஜீவன முத்தன். ஜீவன் முத்தன் செய்வன அனைத்தும் புனிதத் தன்மை வாய்ந்தவையாய்த்தான் இருக்கும்.

மனமே! முதலில் உன்னைப் புனிதப்படுத்திக்கொள்.பிறகு உலகை நீ புனிதப்படுத்தி விடலாம். முதலில் உலகைப் புனிதப்படுத்துவதாக உன்னை நீயே கெடுத்துக் கொள்ளாதே. நீ புனிதனாக முதலில் உன்னிடம் நல்லொழுக்கம வேண்டும். இரண்டாவது மெய்யான குறைவற்ற அன்பிருத்தல் வேண்டும். மூன்றாவது உன்னிடம் தர்ம சிந்தனை இருத்தல் வேண்டும்.அழகாகப் பேசினால் போதாது. நீ அமைதியாக இருக்க வேண்டுமானால் ஒருவருக்கும் தீங்கு நினையாதே. அது பெரிய தர்மமாகும். உன்னாலான வகையில் பிறருக்கு சரீரததாலோ; பணத்தாலோ; புத்தியினாலோ; உதவிசெய்து கொண்டேயிரு. உனக்குச் செல்வாக்கு இருக்கும் போது பிறருக்கு உதவவில்லையென்றால் நீ மிகப பெரிய குற்றவாளியாவாய். சேவை



செய்ய வாய்ப்பிருக்கும் போது முழுமனதோடு பணிசெய்ய முன்வர வேணடும். அத்துடன் தெய்வ நம்பிக்கை தான் உண்மையான மகிழ்ச்சியைத் தரும. பகுத்தறிவுடன் கூடிய மனிதப் பிறவியில் கடவுளை மறவா திருத்தலே படைத்தவனுக்குச் செய்யும் நன்றிக்கடனாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# உண்மையின் வழி சமாதானம் மலரட்டும்

## அருள் திரு ரூபன் மரியாம்பிள்ளை

இப் புதிய ஆண்டின் முதல் தினத்திலே வலம்புரி பத்திரிகை வாசக அன்பர்கள் அனைவருக்கும் புததாண்டு நல்வாழ்த்துக்களை



முதலில் தெரிவிக்கிறோம். பிறக்கும் புதிய ஆண்டு இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவருக்கும் அமைதியும பாதுகாப்பும் மகிழ்ச்சியும் சமாதானமும் நிறைந்த ஒரு ஆண்டாக மலர இறைவன் வழி வகுப்பாராக!

புத்தாண்டு தினத்திலே ஆசிச் செய்திகள் மக்கள் மனதுகளில் மகிழ்வையும் புதுநம்பிக்கையையும் தரும் விதமாக வழங்கப்படுவது உண்டு. யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தமது புத்தாண்டு தினச் செய்தியை சமாதானச் செய்தியாகவே அமைத்திருக்கிறார். வத்திக்கான் நகரில் இருந்து திருத்தந்தை 16ஆவது பெனடிக்ற் பாப்பரசரும் உண்மையின் வழிசமாதாணம் என தமது செய்தியையும் சமாதான செய்தியாகவே அமைந்திருக்கிறார்.

இப் புத்தாண்டு இலங்கை மண்ணில் ஒரு குழப்பமான நிலையிலேயே பிறக்கிறது. இங்கு நடைபெற்ற அரசியல் மாற்றமும் அதன் பின்னர் நிலவுகின்ற முறுகல் நிலையும் தமிழ் மக்கள் அனைவரையும சிந்திக்கவும் கவனமுடன் செயற்படவும் அழைப்பு விடுத்துளளது. பயமும் பதட்டமும் நிறைந்த நிலையில் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்வுடன் தமிழ் மக்கள் புத்தாண்டை எதிர்நோக்கியுளளார்கள். போர் மேகங்கள் அகன்று அமைதியும் சமாதானமும் மலர்ந்து இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழும் நிலை தோன்ற வேண்டும் என்பதே நல் மனது கொண்ட அனைவருடைய இதய விருப்பமும் ஏக்கமும் ஆகும். இந்த விருபபமும் ஏக்கமும் புதிய ஆண்டில் நிறைவு செய்யப்படும் என்று நம்புவோம்.

புதிய ஆண்டில் எமது நல்வாழ்த்தானது உலகெங்கும் வாழும் நல் மனதுகொண்ட அனைவருக்கும் சென்றடையட்டும். குறிப்பாக வன் செயல்களாலும் போராட்டச் செயற்பாடுகளாலும் துன்பத்திலும் வேதனையிலும் இருப்போருக்கு சென்றடையட்டும் என தமது முதலாவது சமாதானத் தினச் செய்தியை ஆரம்பித்த 16ஆவது பெனடிக்ற் பாப்பரசர் உலக சமாதானத்திற்காக எல்லோருமே முற்றுமுழுதாக அர்ப்பணத்தோடு உழைக்க வேண்டுமென அழைப்பு விடுக்கிறார்.

உலகில் அனைவரும் நீதிக்கும் சமாதானத்திற்கும் உண்மை யின் வழி தம்மை அர்ப்பணிப் பார்கள் என்ற உறுதியான எண்ணப்பாட்டு டனேயே இப புத்தாண்டுச் செய்தியை நம்பிக்கை மிகுந்ததாய் அமைக்கிறோம் எனத் தெரிவிக்கின்றார்.

உண்மையின் வழி சமாதானம் என்ற இன்றைய சமாதான தினச் செய்தி உலகிலே மனிதர்கள் எங்கெல்லாம் உண்மையைத் தேடுகிறார்களோ அங்கெல்லாம் அவர்கள் சமாதானத்தின் வழியில் செயற்படுகிறார்கள்.உண்மையைத் தேடுகின்ற போதும் உண்மைக் காக உழைக்கின்றபோதும் சமாதானத்தின வித்துக்கள் இடப்படுகின்றன. சமாதான விருட்சம் அங்கு வளரத் தொடங்குகிறது. காலப்போக்கில் அவ்விருட் சத்தின் சமாதான விருதுகள் உலகம் முழுவதையும் பற்றிப் பிடிக்கும் என்ற நோக்கில் நம்பிக்கையுடன் தரப்படுகின்றது.

இலங்கை மண்ணில் அமைதியும் சமாதானமும் மலர இறைவரம் வேண்டுவோம். (த)

# புத்தாண்டு சிறப்புக் கவிதைகள்

## நலமீயும் நல்லாண்டு

நலமீயும் நல்லாண்டாய்
நனிசிறந்து வந்திடுவாய்!
குலங்காக்கும் குன்றாக
குவலயத்தில் நின்றிடுவாய்!

அரசியற் சகதி தன்னுள்
அமிழ்ந்தென்றும் அழியாமல்
தரமான வாழ்வமைக்கும்
தலைமையினைத் தாங்கிடுவாய்!

அடிமையெனும் மிடியை
அடியோடு அகற்றிநிதம்
விடிவீயும் வித்தாக
விளங்கிடுவாய் புத்தாண்டே!

இனமொழி மதமுமொன்றாய்
இணைந்துநல் வாழ்வமைக்க
மனமாற்றம் காண வல்ல
மகத்துவம் ஈய்ந்திடுவாய்!

கே.பி.திவ்யன் -மாங்குளம்

## இத்தனையும் வேண்டும்

எழுந்துவா இரண்டாயிரத்து ஆறே!
ஈழவரின் வாழ்வுக்கு வழிகாட்ட எழுந்துவா
விழுந்து போய் சீரழியும் வாழ்வுக்கு
விடிவதனை தந்து வழிகாட்ட எழுந்துவா!
அழுந்திக் கொண்டிருக்கும் அச்ச வாழ்வதனை
அவனியிலே போக்கிடவே எழுந்துவா!
பொழுதெல்லாம் சூழ்ந்த அவலமதை போக்கி
புது வாழ்வு காட்டிட எழுந்துவா புத்தாண்டே!

வேரறுந்து போனாலும் புத்தாண்டே
விடிவதனைத் தந்துவிடு புத்தாண்டே
சீரழிந்து போனாலும் புத்தாண்டே
சிவ வாழ்வு மலரட்டும் புத்தாண்டே
நீர் அழித்து விட்டாலும் புத்தாண்டே
நீன்ற வாழ்வைத் தந்துவிடு புத்தாண்டே
பார் கலங்கிப் போனாலும் புத்தாண்டே
பண்பாட்டை பேணவிடு புத்தாண்டே

பரம்பரையாய் வாழ்ந்த மண்ணில் புத்தாண்டே
பாங்குடனே வாழவேண்டும் புத்தாண்டே
உரமான சிந்தனைகள் புத்தாண்டே
ஊரெல்லாம் பெருக வேண்டும் புத்தாண்டே
திறமான கல்வி கலை புத்தாண்டே
தேசத்தில் செழிக்க வேண்டும் புத்தாண்டே
வரமாக இறைஞ்சுகின்றோம் புத்தாண்டே
வாஞ்சையுடன் தந்துவிடு புத்தாண்டே

–மதுரகவி காரை.எம்.பி அருளானந்தன்

## புதுவருடம் பிறக்கட்டும்!

புதுவருடம் பிறக்கட்டும்
பொதுநீதி நிலைக்கட்டும்
மதுபோதை மறையட்டும்
மனித உயிர் வாழட்டும்!

போர்மேகம் கலையட்டும்
பொய்மை மறைந் தழியட்டும்
பாரென்றும் மகிழட்டும்
பகுத்தறிவு ஓங்கட்டும்!

அன்புலகை யாளட்டும்
அடிமைவிலங் கொடியட்டும்
துன்பவிருள் நீங்கட்டும்
துவண்டமனம் துளிர்க்கட்டும்!

தென்நல்லை கு.பகீரதன்

## நலந்தருவாய் புத்தாண்டே!

கொடுக்க மனமில்லான் கூடவிலை கூறல்போல்
நடுவழியில் வந்தபின் புதிய கதை பேசுதல்
கொடுக்கல் வாங்கலில் பிணக்கை உண்டாக்கும்
இணக்கமுண்டாக ஏற்றவழி இல்லையேல் பயனில்லை
அடுக்கிய துன்பம் வந்துற்ற போதிலும்
எடுத்த கருமம் முடித்தலே தருமம்
நடுக்கடலில் தத்தளிக்கும் எமக்குத் துடுப்பாக
நல்வழி காட்டியே நலந்தருவாய் புத்தாண்டே!

யாழ்.ஜெயம்தாசன்

# ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC

## INTERNATIONAL CRICKET COUNCIL

13

# டெஸ்ட் கிரிக்கெற் போட்டி

## வருடத்தில் 70 விக்கெற்

| | ஆண்டு | போ. | பந்து | மெய்டின் | ஓட்டம் | விக் | சராசரி |
|---|---|---|---|---|---|---|---|
| ஷேன் வோர்ண் (அவுஸ்) | 2005 | 15 | 4336 | 141 | 2114 | 96 | 22.02 |
| டெனிஸ் லில்லி (அவுஸ்) | 1981 | 13 | 3710 | 147 | 1781 | 85 | 20.95 |
| அலன் டொனால்ட் (தென்.ஆபி) | 1998 | 14 | 3232 | 135 | 1571 | 80 | 19.63 |
| முத்தையா முரளிதரன் (இல) | 2001 | 12 | 4688 | 216 | 1699 | 80 | 21.23 |
| ஜேகார்னர் (மே.இந்) | 1984 | 15 | 3626 | 148 | 1629 | 79 | 20.62 |
| கபில்தேவ் (இந்) | 1983 | 18 | 3469 | 112 | 1739 | 75 | 23.18 |
| முத்தையா முரளிதரன் (இல) | 2000 | 10 | 3740 | 147 | 1463 | 75 | 19.50 |
| கபில் தேவ் (இந்) | 1979 | 17 | 3553 | 141 | 1699 | 74 | 22.95 |
| அனில் கும்ளே (இந்) | 2004 | 12 | 3680 | 127 | 1838 | 74 | 24.83 |
| மார்ஷல் (மேற்.இந்) | 1984 | 13 | 3251 | 119 | 1471 | 73 | 20.15 |
| ஷேன் வோர்ண் (அவுஸ்) | 1993 | 16 | 5054 | 316 | 1697 | 72 | 23.56 |
| ஜி.மக்கன்ஷி (அவுஸ்) | 1964 | 14 | 4106 | 119 | 1737 | 71 | 24.46 |
| ஷேன் வோர்ண் (அவுஸ்) | 2004 | 12 | 3472 | 123 | 1685 | 70 | 24.07 |
| ஷேன் வோர்ண் (அவுஸ்) | 1994 | 10 | 3774 | 217 | 1274 | 70 | 18.20 |

## அணிகளுக்கெதிராக 5 & 10 விக்கெற்

| 5 விக்கெற் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 5விக் | போ. | அவு | இங் | தெ.ஆ | மேற் இந் | நியூ | இந் | பாக் | இல. | சிம். | பங் |
| முத்தையா முரளிதரன் (இல) | 48 | 99 | 5 | 4 | 8 | 8 | 4 | 4 | 4 | - | 6 | 5 |
| றிச்சார்ட் ஹாட்லி (நியூ) | 36 | 86 | 14 | 8 | - | 4 | - | 4 | 4 | 2 | - | - |
| ஷேன் வோர்ண் (அவுஸ்) | 34 | 134 | - | 10 | 6 | 3 | 3 | 1 | 6 | 5 | 0 | - |
| அனில் கும்ளே (இந்) | 31 | 100 | 9 | 3 | 3 | 3 | 3 | - | 4 | 4 | 2 | - |
| கிளென் மெக்ரா (அவுஸ்) | 28 | 118 | - | 9 | 2 | 8 | 2 | 2 | 3 | 2 | 0 | 0 |
| இயன் பொத்தம் (இங்) | 27 | 102 | 9 | - | - | 3 | 6 | 6 | 2 | 1 | - | - |
| வஸீம் அக்ரம் (பாக்) | 25 | 104 | 4 | 2 | 0 | 4 | 6 | 2 | - | 3 | 4 | 0 |
| எஸ்.வார்னெஸ் (இங்) | 24 | 27 | 12 | - | 12 | - | - | - | - | - | - | - |
| டெனிஸ் லில்லி (அவுஸ்) | 23 | 70 | - | 11 | - | 3 | 4 | 0 | 5 | 0 | - | - |
| இம்ரான் கான் (பாக்) | 23 | 88 | 3 | 4 | - | 6 | 1 | 6 | - | 3 | - | - |
| கபில் தேவ் (இந்) | 23 | 131 | 7 | 4 | 0 | 4 | 0 | - | 7 | 1 | 0 | - |
| மார்ஷல் (மேற் .இந்) | 22 | 81 | 7 | 6 | - | - | 1 | 6 | 2 | - | - | - |
| 10 விக்கெற் | | | | | | | | | | | | |
| முத்தையா முரளிதரன் (இல) | 14 | 99 | 1 | 2 | 2 | 3 | 0 | 1 | 1 | - | 2 | 2 |
| ஷேன் வோர்ண் (அவுஸ்) | 10 | 134 | - | 4 | 2 | 0 | 0 | 0 | 2 | 2 | 0 | - |
| றிச்சர்ட் ஹாட்லி (நியூ) | 9 | 86 | 3 | 2 | - | 1 | - | 2 | 0 | 1 | - | - |
| அனில் கும்ளே (இந்) | 8 | 100 | 2 | 1 | 0 | 0 | 1 | - | 2 | 2 | 0 | 0 |
| எஸ்.வார்னெஸ் (இங்) | 7 | 27 | 1 | - | 6 | - | - | - | - | - | - | - |
| சி.கிறிம்மீற் (அவுஸ்) | 7 | 37 | - | 2 | 4 | 1 | - | - | - | - | - | - |
| டெனிஸ் லில்லி (அவுஸ்) | 7 | 70 | - | 4 | - | 1 | 1 | 0 | 1 | 0 | - | - |
| அண்டர்வூட் (இங்) | 6 | 86 | 2 | - | - | 0 | 3 | 0 | 1 | 0 | - | - |
| இம்ரான் கான் (பாக்) | 6 | 88 | 1 | 1 | - | 1 | 0 | 2 | - | 1 | - | - |
| லோமான் (இங்) | 5 | 18 | 3 | - | 2 | - | - | - | - | - | - | - |

## வீழ்த்திய விக்கெற்றுக்களில்...

### BOWLED

முத்தையா முரளிதரன் (இல) 137 (584)
ஷேன் வோர்ண் (அவுஸ்) 106 (657)
எவ்.றூமான் (இங்) 103 (307)
ஜே.சாந்தம் (இங்) 102 (252)
வக்கார் யூனிஸ் (பாக்) 102 (373)
வஸீம் அக்ரம் (பாகி) 102 (414)

### LBW

ஷேன் வோர்ண் (அவுஸ்) 127 (657)
வஸீம் அக்ரம் (பாக்) 119 (414)
அனில் கும்ளே (இந்) 118 (485)
கபில் தேவ் (இந்) 110 (434)
வக்கார் யூனிஸ் (பாக்) 110 (373)

கிளென் மெக்ரா (அவுஸ்) 107 (539)
முத்தையா முரளிதரன் (இல) 99 (584)
றிச்சார்ட் ஹாட்லி (நியூ) 83 (431)

### STUMPED

ஷேன் வோர்ண் (அவுஸ்) 33 (657)
முத்தையா முரளிதரன் (இல) 31 (584)
சி.கிறிம்மீற் (அவுஸ்) 28 (216)
எஸ்.குப்தா (இந்) 20 (749)
வி.பேடி (இந்) 18 (266)
ஏ.மெய்லி (அவுஸ்) 18 (99)
எம்.மாவ் கெட் (இந்) 18 (162)
இக்பால் ஹஸீம் (பாக்) 17 (171)

### HIT WICKET

ஜி.மக்கன்ஷி (அவுஸ்) 4 (246)
கபில் தேவ் (இந்) 3 (434)
ஆர்.வின்ட்வோல் (அவுஸ்) 3 (228)
எம்.மாங்கெட் (இந்) 3 (162)
எவ்.றூமான் (இங்) 3 (307)

### CAUGHT AND BOWLED

அனில் கும்ளே (இந்) 25 (485)
முத்தையா முரளிதரன் (இல) 24 (584)
ஷேன் வோர்ண் (அவுஸ்) 21 (657)
அண்டர் வூட் (இங்) 20 (297)
ஆர்.வேனாட் (அவுஸ்) 17 (248)

### CAUGHT

ஷேன் வோர்ண் (அவுஸ்) 389 (657)
கிளென் மெக்ரா (அவுஸ்) 360 (539)
கொட்னி வோல்ஷ் (மேற்.இந்) 349 (519)
முத்தையா முரளிதரன் (இல) 316 (584)
அனில் கும்ளே (இந்) 282 (485)
அம்றூஸ் (மேற்.இந்) 269 (405)
றிச்சர்ட் ஹாட்லி (நியூ) 256 (431)
ஷேன் பொலக் (தென்.ஆபி) 247 (384)
இயன் பொக்கம் (இங்) 243 (383)
டெனிஸ் லில்லி (அவுஸ்) 239 (355)

## முதல் பந்தில் (போட்டியில்) விக்கெற்

டெஸ்ட் போட்டியில் அறிமுகமாகி வீசிய முதல் பந்தில் விக்கெற்றினை வீழ்த்தியவர்களும் உள்ளனர். அவ்வரிசையில் 13 பேர் இதுவுரை காலமும் இச்சாதனைக்கு சொந்தக்காரர்களாகவுள்ளனர்.

இச்சந்தர்ப்பம் 1894 - 95 காலப்பகுதியில் மெல்போர்னில் இடம்பெற்ற அவுஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் இடம்பெற்றது.

அவுஸ்திரேலிய வீரர் கொனிங்கம் இங்கிலாந்தின் துடுப்பாட்ட வீரர் மக்லாறனை வீழ்த்தியதன் மூலம் முதலாவது சாதனையினைப் படைத்தார்.

இவ்வரிசையில் இங்கிலாந்து வீரர்



'முன்னர் நான் தானே!'
(கபில் தேவ்)

களான பிரெட்லி (அவுஸ் - லேவர்), ஆர்னோல்ட் (அவுஸ்- ரம்பர்), மக்காஸி (தென் ஆபி - கேர்ண்), ரேற் - தென் ஆபி - சஸ்கின்ட் கோவோர்க் (தென்.ஆபி - டேஜர்) இலிங்வோர்த் (மேற். இந் - ஸைமன்ஸ் ) ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

நியூசிலாந்து அணி சார்பில் ஹெண்டர்ஸன் (இங் -டோஸன்) ஸ்மித் (இங்-பெய்ன்ரர்) மேற்கிந்திய வீரர் ஜோன்ஸன் (இங்-கற்றன்), பாகிஸ்தான் வீரர் இன்ரிகப் அலாம் (அவுஸ் - மக் டொனால்ட்) இந்திய வீரர் குல்கர்னி (இல - அத்தப்பத்து), இலங்கை வீரர் லஸித்த (பங் - முஹமட் அஷ்ரபுள் ) ஆகியோர் இடம்பெறுகின்றனர்.



புகழில் கறை படியவில்லை.
(அலன் டொனால்ட்)

## முதற் போட்டியில் 10 விக்கெற்

**அவுஸ்திரேலியா**

சி.கிறிம்மீற் எதிர் இங் 11- 82 (சிட்னி, 1924/25)
மஸி எதிர் இங் 16 - 137 (லோர்ட்ஸ், 1972)

## நோயல்

**இங்கிலாந்து**

எவ்.மார்ட்டின் எதிர் அவுஸ் 12 - 102 (ஓவல், 1980)
ரி.றிச்சர்ட்ஸன் எதிர் அவுஸ் 10 - 156 (மஞ்செஸ்ரர், 1893)
சி.மாறிட் எதிர் மேற் இந் 11-96 (ஓவல், 1933)
பார்னெஸ் எதிர் அவுஸ் 10 - 179 (நொட்டிங்கம், 1934)
பேட்ஸர் எதிர் இந் 11-145 (லோட்ஸ், 1946)
லேவர் எதிர் இந் 10 - 70 (டெல்லி, 1976/77)

**இந்தியா**

சிர்வாணி எதிர் மேந் இந் 16 - 136 (சென்னை, 1987/88)

**பாகிஸ்தான்**

முஹமட் ஷகிட் எதிர் நியூ 11 - 130 (ராவல்பிண்டி, 1997/98)

**தென்னாபிரிக்கா**

கோல் எதிர் இங் 11- 112 (கேப்ரவுண் , 1922/23)
பேர்ன் எதிர் நியூ 11 - 196 (கேப்ரவுண், 1961/62)

**மேற்கிந்தியா**

ஜோன்ஸன் எதிர் இங் 10 - 96 (கிங்ஸ்ரன், 1947/48)
வெலன்ரைன் எதிர் இங் 11 - 204 (மஞ்செஸ்ரர், 1950)

*(அடுத்த வாரம் தொடரும்...)*

# தேசிய கல்வியியற்கல்லூரி நேர்முகப் பரீட்சை – 2006

(நேற்றைய தொடர்ச்சி)

## முதலாம் மொழி

எம்.பி.துஸ்ரா றவி. - (ஆரயம் பதி),என்.ஊர்மிளா (கல்முனை), வி.தர்சினி (பருத்தித்துறை), பி.ஏகலிங்கம் (வாழைச்சேனை), எஸ். ரூபவாணி (கல்முனை), ஐ.எஸ்.சாஜகான் (மொன்னிக்குளமா),ஏ.கந்தசாமி (கிளிநொச்சி), எஸ்.இரத்தின சிங்கம் (புத்தூர்), ரீ.சுதர்சன்(வட்டுக்கோட்டை), எஸ்.யசோதா (மாங்குளம்), ஏ.ஆர்.மொகமட் றிம்ஸான் (அட்டாளைச் சேனை10), ஏ.தமிழினி (தம்பில்லுவில்1),ஐ.எல்.எம்.றிஸ்.ஃவான் (சம்மான்துறை),எம்.ஐ.எவ்.சம்சிதா (மருதமுனை2), ஏ.ரகீம் சம்பாந்துறை), ரீ.காயத்திரி(வல்வெட்டித்துறை), எம்.வை.எம். தஸ்ரீவ் (மருதமுனை 6), ஏ.எல்.எம்.ஹரீத் சாய்ந்தமருது10), ஏ.ஃபொசூனா சம்மாந்துறை2), ஆர்.நிலாஜினி (அக்கரைப்பற்று).

கே.நிரோஷினி (வத்தகொட),எ.ஆர்.எஸ். அன்பரா (நின்றவூர் 4),எம். உதயா (காரைநகர்), பி.எவ்.பிரியாசினி(மட்டக்களப்பு), எம்.ஏ.சஜிதா, (கல்முனை), வி.ரி.மொகமட் ஜனூான் (ஏறாவூர்1),ரி. தவராஜா (மிருசுவில்),எஸ்.ராஜரட்ணம் (நீர்வேலி),கே. தினேஸ் (யாழ்ப்பாணம்), பீ.பாலதர்சினி(பலாலி), எம்.ஜே.எம். ரியாஸ (ஹட்டன்), பீசுபகலா(கந்தபொல), எஸ்.கிருபானந்தராஜா (ஹட்டன்),என்.சுதாஜினி (கரவெட்டி), எஸ்.மதுரா (சுன்னாகம்), வை.முகுந்தன் (யாழ்ப்பாணம்), எஸ்.வசிகரநாதன் (வரணி), ரீ.நவரத்தினமலர்(பருத்தித்துறை), ரீ.வதனரூபன் (மிருசுவில்), என்.பாமினி (யாழ்ப்பாணம்), எம் உவூபேபி (உரும்பிராய்),

எஸ்.பிரதீபன்(மானிப்பாய்),கே.பூபாலசிங்கம் கிளிநொச்சி), பீ.ஸ்டீபன்(பலாலி), கே. பத்மாவதி வட்டக்கச்சி ),எஸ்.ரவிந்திரன் (உடையார்கட்டு), ஏ.ஜெயநேசன் (முல்லைத்தீவு), ஆர். சசிகரன் (முல்லைத்தீவு), ரீ.கோகிலப்பிரியன் (நெடுங்கேணி), ஈ.ராஜநந்தினி (வவுனியா),எம்.நிர்மலகணேஷ் (வவுனியா), என்.சிவரஞ்சினி (மூதூர்), கீ.வதனகுமாரி (மூதூர்), ஏ.எஸ்.மொகமட் நசீர் (கிண்ணியா-5),எம்.எஸ். ஃபஸ்தின்(கல்முனை),கே. சுதர்சன் (திருக்கோயில்-1), ஏ.எல். அஸ்மீர (சம்மாந்துறை-1),கே. அருள்வாணி கல்முனை பி.விஜிதா சம்மாந்துறை), ஏ. கே.ஷிபானா (அட்டாளைச்சேனை-2).

## சங்கீதம்

எஸ்.சிவகரன்(சாவகச்சேரி), ஈ.தேன்மொழி (தெல்லிப்பளை),கே. அஜந்தினி (பருத்தித்துறை), ஆர்.பிரியதர்சினி (சித்தங்கேணி),எஸ்.கவிதா (தெல்லிப்பளை), எஸ். அருணா(கோப்பாய்), ரீ.விஜிதலோஜினி (சுன்னாகம்), கே.சோபிகா(வரணி), எஸ்.யமுனா (வரணி), ரீ.ராசரட்ணம்(பரந்தன்) ஆர்.லாதங்கினி (மல்லாவி), ஜே.ஆர்.சசிகலா (முருங்கன்), எம்.சுபாசினி(கோண்டாவில்), எம்.கார்த்திகா(சுன்னாகம்),எஸ்.சங்கரரேஸ்வரன் (நெடுங்கேணி), ரீ.சுலக்ஷனா (குப்பிளான்),பீ.கோகிலா (கொடிகாமம்), ரீ. மகிசா (சுன்னாகம்), ரீ.கைலன் (வவுனியா), ரீ.கல்யாணி (தலையாடி), எஸ். தயாழினி (சுழிபுரம்) வீ.புஸ்பவாணி), ஊர்காவற்றுறை), வி.கணேஷ்வரன் (சங்கானை),

எஸ்.விஜியலலிலா (முருங்கன்),ஆர்.ராதிகா (பரந்தன்), ஆர்.கமலவேணி (கொடிகாமம்),பி. அஜந்தா (யாழ்ப்பாணம்), கே. நடராஜ்ஜா (யாழ்ப்பாணம்), எஸ்.சங்கராஸ்வரி (நெடுங்கேணி), எஸ்.விஜிதர் (ஒட்டிசுட்டான்), ஆர் ஜெயதர்சினி (இணுவில்), எவ்.ஏ.பிரியந்தினி (யாழ்ப்பாணம்), எஸ்.புவனேஸ்வரி (நீர்வேலி),என் சுமித்திரா(கொடிகாமம்),ரீ.கலைவாணி (இணுவில்), பி.தர்சிகா (கொக்குவில்),எஸ்.சங்கிர்தா (சுன்னாகம்), ரி.சங்கீதா(வரணி), எம்.மகாதிலகலட்சுமி (உரும்பிராய்), கே.சீனுஜா(உடுவில்), எஸ்.சுவிதா (வரணி), எம்.லலிதா (மானிப்பாய),கே. யசோதா (நெடுங்கேணி), எம்.திணேஸ்குமார்(காரைநகர்),கே. ஸ்ரீதரன் (வவுனியா), எஸ்.வினோஜிதா (திருகோணமலை), ஆர்.அனுசியா (திருகோணமலை).கே. அஜந்தா (திருகோணமலை), எஸ்.தவசீலன் (கல்முனை-2), கே.மேகலா (காரைதீவு).

## இந்துசமயம்

வி.தர்சினி(பருத்தித்துறை), பி.ஏகலிங்கம் (வாழைசசேனை), ஏ.கந்தசாமி (கிளிநொச்சி), எஸ்.ரத்தினசிங்கம் (புத்தூர்),கே. மீரா (மசாலை), ர.சுதர்சன் (வட்டுக்கோட்டை) எஸ்.யசோதா(மங்குளம்), ஏ.தமிழினி (தம்பில்லுவில்-1), கே. நிரோசினி (வட்டகொட),எஸ் திருக்கேதீஸ்வரன் பருத்தித்துறை),பீ.பிரதீபா (யாழ்ப்பாணம்),வி.ஜீவறஜனி (யாழ்ப்பாணம்),. கே. தினேஷ் (யாழ்ப்பாணம்), எம்.வத்ஸ்சன் (வவுனியா),கே.மைதிலி (சாவகச்சேரி), என்.சிவரஞ்சினி(மூதூர்), கே.கே.சர்மினி(சாவகச்சேரி),எஸ்.நாராஜனி (அச்சுவேலி), வை.முகுந் தன்(யாழ்ப்பாணம்),என் ஆர்த்திகா (இணுவில்).

பி.தர்மசீலன்(கொக்குவில்),கே.சுதர்சன் (திருக்கோவில்-1), எஸ்.கமலீஸ்வரன் (மீசாலை), ஆர். நிலானி (வவுனியா), ஏ.தாரகா (திருகோணமலை), ரி.கோகிலப்பிரியன் (நெடுங்கேணி). பி.விஜிதா (சம்மாந்துறை), எஸ்.தாட்சாயினி (வவுனியா),எஸ்.வசீகரநாதன்(வரணி), எஸ்.மதனிகா (சாவகச்சேரி),எஸ்.பிரேமினி (மீசாலை), பீ.ஸ்டிபன் (பலாலி),கி.நவரத்தின மலர்(பருத்தித்துறை), ஏ. பகவதி (மட்டக்களப்பு), என் மனோகரன் (திருகோணமலை), ஜே.மதுரா(வரணி), எம்.நிரோஜினி(குருக்கல் மடம்),கே. பத்மவதி(வட்டக்கச்சி), எஸ்.துவாசினி (மீசாலை), என் .தவராஜா(முல்லைத்தீவு), என். வதனகீதா(கரவெட்டி), எஸ்.ரமேஷ்குமார்(வட்டகொட),கே.குவனேஷ்வரி (வட்டகொட), கே.விஜயகாந்தன் (கொடிகாமம்),என் அனித்தா(மானிப்பாய்), பி.மோகன்யா (யாழ்ப்பாணம்), எஸ்.சிவதர்சி(கோண்டாவில்), என்.சுதர்சினி (நயினாதீவு),பி.காயத்திரி (உடுப்பிட்டி),கே. ரேணுகா (வல்வெட்டித்துறை), ஏ.வானதி (அச்சுவேலி), ரி.சிவதர்சினி (யாழ்பபாணம்), பி.கோபிகா (கோண்டாவில்), வி.கிருஷ்ணவேணி (சுழிபுரம்),ரி.நிசாந்தி (வல்வெட்டித்துறை),பீ.விஜவர்த்தனி (கரவெட்டி), வி.துளசி (அச்சுவேலி).

ஏ. முத்துலிங்கம (சித்தன்கேணி),வி.குமுணரஞ்சினி (பரந்தன்), வி.விநோதினி (கிளிநொச்சி), பி.பிரகலாதன் (பூநகரி), வி.குமுதினி (மடுதேவாலயம்), எம்.சிந்துஜா (மன்னார்), பி.சியாமளா (அடம்பன்),கே.மைதிலி (முள்ளியவளை), ஏ.பிரபாகர் (புதுக்குடியிருபபு), ரீ.கார்த்திகா (முள்ளியவளை),கே. நிரஞ்சனி(வவுனியா), எஸ். செல்வரத்தினம்(வவுனியா),எஸ்.எஸ்.ராஜசேகரம் (வவுனியா), ஜெயசீசன் (ஈச்சிலம்பட்டு),ரி.அகிலன் (மூதூர்), எஸ்.கமலேஸ்வரன்(ஈச்சிலமட்டு),ஏ.சந்திரிகா (தம்பிலுவில்1), எம்.குமுதன் (காரைதீவு-1), எஸ். சரண்ஜா (காரைதீவு 10), வை.கமலினி (கல்முனை), வி.சர்மிளாதேவி( கல்முணை), எஸ்.சந்திரபிரியா (மல் வத்தை-1), ஜி.சரண்ஜா (அக் கரைப்பற்று7), கே.தேவதாசன் (கலமுணன), யு.ஸற் ஜெயந்தினி (சிலாபம்), எஸ்.கருணேஷ் (புத்தளம).

## நடனம்

ரி.ஏ.தர்சினி (கொச்சிக்கடை), ஏ.தமிழினி (தம்பிலுவில்-1), ஏ.தமலிங்கம் (மட்டக்களப்பு), ஏ.சர்மளா (சாவகச்சேரி),எஸ்.சங்கீதா(புதுக்குடியிருப்பு), எம்.பிரியா (தம்புலுவில்-2), ஜி.டொன்பாஸ்கா (முல்லைத்தீவு), யு.பீ.சுப்பிரமணியம்(யாழ்ப்பாணம்), ரி.வினோதினி (செட்டிபாளையம்), ஆர்.கிருசுதா (கொக்குவில்), எஸ்.நிறஜா (மட்டக்களப்பு), வி.வரதினி (வவுனியா), பீ.தாட்சாஜினி (இணுவில்), ரி.ஜெயரஞ்சனி (யாழ்ப்பாணம்), ரி.சுகப்பிரியா (திருகோணமலை), எஸ்.அஸ்வினி (முல்லைத்தீவு), ரி.சுரேகா (உடுப்பிட்டி), கே.சிவக்கொழுந்து (கிளிநொச்சி), ஏ.சுயாதா (ஆனைக்கோட்டை ஜங்வுன்), எஸ்.கார்த்திகா (சுன்னாகம்), ஜே.சோபியா (மன்னார்),ஏ.சுதர்சிகா (தர்மபுரம்),எஸ்.சிவகௌரி முள்ளியளை), எஸ்.கணேஸ் வரன் (சங்கானை),கே.சியமளா (வவுனியா), ஜே.அன் ரனிராஜன் (மன்னார்), எம்.அனுசா (கொக்குவில்), எஸ்.அஸ்வினி (களுவாஞ்சிக்குடி), ரி.கிருபாகரி (தம்பிலுவில்-1),கே.மாலதி (கொடிகாம்ம்), ஏ.சிந்துஜா (யாழ்ப்பாணம்), எச்.உசாநந்தினி(ஊர்காவற்றுறை).

ஜி.டல்சி. (உரும்பிராய்), வி. ஜீவிதா (கோப்பாய்), எஸ்.விவிதா (கரவெட்டி), எஸ்.லஜின்ரா (மானிப்பாய்), எஸ்.நிரோசா(ஏழாலை),பி.சுவர்ணா(அளவில்),எம்.சுஜிதா(கொடிகாமம்),ஏ.அனிதா (கோப்பாய்), ஆர்.அனுசயா(கரவெட்டி), கே.வித்யா (கோண்டாவில்), ஈ.வுர்மிளா(வவுனியா),பி. லோஜனா (யாழ்ப்பாணம்), ஆர். சரன்யா (வவுனியா),எஸ்.மேகலா (திருகோணமலை),வி. சுஜந்தினி(அம்பாறை), எல்.திபந்தி (கல்முனை-3),ஆர் .ராஜ்பிரவீனா (தம்பிலுவில்-1), எம்.தினேஜ (கல்முனை-2), பீ.கிரிஜனி (திருக்கோவில்-2), எஸ.சுபோதினி(அம்பாறை),

## விஞ்ஞானம்

எஸ்.டி.மும்தர்ஸ் ஃபமிலா(கல்கமுவ),வி.கௌரிபாலன்(கிளிநொச்சி),ஆர்.எவ்.எவ்.சருவா (தெல்தோட்ட), எ.பீ.எவ். தனியா(காத்தான்குடி-2), எஸ்.எம்.நுவ்ரத் ஜெகான்(புத்தளம்), வி.ஐங்கரதாசன் (கரவெட்டி), ரி.கௌதமி (வவுனியா),பீ.கஜேந்திரன் (வல்வெட்டித்துறை), எஸ்.நித்தியரூபன்(கோப்பாய்),கே. வசந்தி (மாத்தளை),ஏ.எல்.எம்.ஹிசாம் (இரக்காமம்-6), எஸ்.தயாளன் (உடுப்பிட்டி).

பீ.அரவிந்தன் (உடுப் பிட்டி),என்.ஏ..ஃபெலிக்ஸ் (வவுனியா),எம்.ஏ.எம்.அலியார் (மல்வத்த-3),ரி.கோகிலன் (வவுனியா), வி.வசந்தன் (மட்டக்களப்பு),எம்.எஸ்.வீ.ஃவசா (தெகிவளை), ஆர்.சஞ்சிவன்(கிளிநொச்சி), கே.ஜேயவண்ணன் (பூநகரி),எம்.விஜயதர்சன் (மட்டக்களப்பு), பி.மோகனதாஸ் (தமிபிலுவில்-1), ஜே.பகிரதன் (சித்தண்டி), எம்.ராஜமேனகன் (சுன்னாகம்) கே.புவிக்காந்த் (கொடிகாமம்), பி.துவானந்தி (கரவெட்டி), ரி.மதிகரன் (உடுப்பிட்டி),எம்.எச்.ஸற் ஹசீரா(கொழும்பு14), எஸ்.சஞ்சிகா(மட்டக்களப்பு ),எல்.ரி.எஸ்.பிர சாந்தினி (வல்வெட்டித்துறை), எம்.எம்.றிஸ்வி (ஓட்டமாவடி3) ஏ.ஆர்.யு.சலிமா(குளியபிட்டிய),என். பரராஜசிங்கம் (தெகிவளை),எம்.நிருபா (காரைதீவு5),ஏ.குருமதி (யாழ்ப்பாணம்),பி.தாட்சாயினி (வவுனியா),வி.ஜெயவதனி (முல்லைத்தீவு), எஸ்.சுதாமதி (இளவாளை), எம்.ரஜீவ்வாசன் (மட்டக்களப்பு),யு.சகாபுடீன்(சம்மாந்துறை),என்.காண்டிபன்(மட்டக்களப்பு), எஸ்.எஸ்.சிவராஜா (வவுனியா), ஏ.எம். ரிஸ்வான் (கிராமம்),ஜி.அனுதர்சன் (நெடுந்தீவு மேற்கு),ஏ.சுமான் (கல்முனை),ஏ.பாத்திமாருக்ஷனா (சியம்பலாகஸ்கொட்டுவ),கே. பிரசாந்தன் (சாவகச்சேரி),எஸ்.எஸ்.றிவானா (மாத்தளை), எஸ்.ரி.ஷிவானி (மருதமுனை -6), எம்.எ.அரவாத் (கிண்ணியா4), ஏ.மலரினி (பருத்தித்துறை), எவ்.ஆர். எம்.இல்ஹம் (சிலாபம்),ஏ.சந்திரிகா (மட்டக்களப்பு),கே. கஜேந்திரகுமார் (ஆரியம்பதி-2), எம். எஸ்.எவ்.ரஸ்மினா (வெயுடா), எஸ். பிரதாபன் (வட்டுக்கோட்டை),எ.எம்..ஃபௌசாத்(கிண்ணியா-5), ஆர்.திரீஸ்வரன் (வவுனியா), கே.மதிருபன் (உடுப்பிட்டி),எஸ்.ரஜிகலா (மிருசுவில்), ஜே.தயாளினி (மட்டக்களப்பு),கே. தர்சினி(வவுனியா), எம்.எவ்.முன்னாவரா(ஏறாவூர்-3),யு.திலிபன் (சங்கானை), பி.ஜனப்பிரியன் (கல்முனை-2), எஸ். வத்சலகுமாரி (யாழ்ப்பாணம்), என் சிறிரஞ்சன் (மண்டூர்) எஸ்.பிரியதர்சினி (கோப்பாய்),எம்.ஆர்.ஜேசனா (மருதமுனை-5), எஸ்.தினுஜா(யாழ்ப்பாணம்), ரி.கஜேந்தினி (மட்டக்களப்பு),எம்.ஆர்.எவ்.றஸ்ரன் (காத்தான் குடி-4), ஏ.டபிள்யு. எம்.அ.ஃவ்லால் (புத்தளம்), ஜே.ஜெயகிறிஸ்ரர் (இளவாளை)எஸ்.ஜெயந்தினி (நீர்வேலி), கே.கஜந்தா(யாழ்ப் பாணம்), பீ.ஐ.ஜே. எம்.நிர்மலின்(யாழ்ப்பாணம்), வி.ராதிகா (வல்வெட்டித்துறை), ஜே.கோபிகா (பருத்தித்துறை),ஜே.லாவன்ஜா (சுன்னாகம்), கே.யசிந்தா (பருத்தித்துறை),வி.லோஜிதன் மீசாலை), ஜி.மதனகுமார் (யாழ்ப்பாணம்), பீ.சிந்துஜா (யாழப்பாணம்),வி.திவாகரன்(வட்டுக்கோட்டை), எஸ்.கிருபாலினி(நீர்வேலி), எஸ்.நிர்மலன்(கொக்குவில்), எஸ்.சிவகாமி (இணுவில்),கே.சசிகலா (இளவாலை), எஸ்.துஷ் யந்தி (புலோலி),எஸ்.சிந்துஜா (யாழப்பாணம்),எஸ்.ஆனந்தஸ்ரீ (யாழ்ப்பாணம்),ஆர் கோகிலன் (சுன்னாகம்), ரி.உமாகரன் (மல்லாகம்),ஜே. சிந்துஜா (யாழ்ப்பாணம்),என்.நிரோபா (கிளிநொச்சி),

எஸ்.சுஜிதா (சண்டிலிப்பாய்),பி.வசந்தகௌரி சுழிபுரம்), வி.வஜீந்( கொக்குவில்),எஸ். கமலவேந்தன்(யாழ்ப்பாணம்), சௌமதி(கல்வியங்காடு), என்.மயூரினி (இணுவில்),எஸ்.பிறைசூடி (அச்சுவேலி), எஸ்.தோமிசான்(சுழிபுரம்)எஸ். சுபாங்கி (யாழ்ப்பாணம்), ஜி.கருணாதரன்(யாழ்ப்பாணம்),ரி.தினேஷ் (கொக்குவில்), எம்.பாலசுந்தரம் (உடுப்பிட்டி), கே.ஞானசேகரன் (யாழ்ப்பாணம்),கே. சிறிகரன் (கிளிநொச்சி), எஸ்.சுகாந்தினி (பரந்தன்),ஏ.லதுமீரா (கிளிநொச்சி), வி.சுபோஜினி (மன்னார்),ரி.ஈ.டி.பச்சாகி(மன்னார்),எம்.சுமலதா (மன்னார்),என்.மயூரதன் (புதுக்குடியிருப்பு), எஸ்.ராதிகா (முல்லைத்தீவு),வி.மஜுூதரன்( யோகபுரம்), ஆர். உமாகரன்(முல்லைத்தீவு).

ரீ.அர்சனா (முள்ளியவளை),எஸ்.அரியரத்தினம் (புதுக்குடியிருப்பு), எஸ்.சுஜிபா (வவுனியா),என் சர்மினி (வவுனியா), வி.பத்மாஜினி (வவுனியா),ஏ.ரம்ஜா (திருகோணமலை),எம்.எவ்.எம். நவ்ரீ (கிண்ணியா-2), கே.கணோஜன்(திருகோணமலை),கே.எம்..ஃயஸ்(கேகிரவ),எஸ்.யஸீா (கிண்ணியா-3),எவ்.அம்ஜத் (கிண்ணியா -3), எஸ்.ஐ.எம்.இபாம் (இரக்காமம்-1)ஏ.ஆர்.எம்.கியாஸ் சாய்ந்த மருது-4), ரி.உதயராஜீ (காரைதீவு), ஈ.இலக்சுமிகாந்தன் (கல்முனை1),ஏ.எச்.எம்.ஈ.றோசினி ஜனா (பெரியநீலாவணை), எம்.கோ.எவ்.ஜெகான் (மருதமுனை-5), ஆர்.அமுதசாகரன்(கல்முனை- 1),ஏ.நில்லுஜன் (சம்மாந்துறை),கே.பிரியதர்சினி(கல்முனை),கே.தட்சாயனி (கல்முனை-1),பி.ஜெயரீதன்(கல்முனை-2), எஸ்.எச். எம்.ரிஸ்வான் (மருதமுனை-2),எம்.எ.வர்சனா பேகம் (சாய்ந்தமருது-5),ஜெ.அன்ரனிவசஸ் (காரைதீவு-1), எம்.பி.எம்.சஜித்தா பர்மின் சம்மாந்துறை),

## கலை

ஏ.எம். அலிராஜே (புத்தளம்), எம்.ஜிவிதா (அக்கரைப்பற்று),ஆர் ராஜ்குமார் (முல்லைத்தீவு),எம்.பயஸ் (கிண்ணியா), ரி.எம்.நிசார்(தம்பலகாமம்), ரி.சுரேஸ்ராஜா (அக்கரைப்பற்று-7),கே.எம்.தர்சிகா (கல்பிட்டிய), கே.கலைமாறன் (வல்வெட்டித்துறை),எம்.எம்.நாஜாத் (கிண்ணியா-3),என்.ஜெயதீபன் (மானிப்பாய்),எம்.ஏ.எட்மஸ்வரன் (தம்பலகாமம்),வை.தியோப்ரா (யாழ்ப்பாணம்), எஸ்.எம்.சையத்கான் (கிண்ணியா), எ.எம்.எஸ்.மொகமட் (கிண்ணியா), எம்.ஐ.முஸாதிக்(தம்பலகாமம்),ஏ.ஆர்.எம்.தெனபீக் (கந்தளாய்), எவ்.ஜவீர (கிண்ணியா)ஜே.எம்.ரறீஸ் (கிண்ணியா-5), கே.எம்.டில்சாத் (கிண்ணியா-5), எ.எச்.எம்.யனிஸ் (கிண்ணியா), வி.சர்மினி (துனுக்காய்), எஸ். சாந்தகுமார் (மட்டக்களப்பு), ஏ.ஆ.எம்.ஸல்வா (சாய்ந்தமருது-12), எஸ்.எம்.சிஜீத் (கிண்ணியா),பி.புண்ணியமுர்த்தி (கிளிநொச்சி), எ.எம்.அம்ஜத்கான் (கிண்ணியா), எஸ்.எம்.நிஸ்தர் (புத்தளம்), எம்.ஏ.சி.அஸ்பின் (புத்தளம்), கே.தவராஜ் (மட்டக்களப்பு), கே.சுந்தரலிங்கம் (சாந்திவேலி), ரி.தவசீலன் (சுன்னாகம்). ஆர் .காண்டீபன் (கிளிநொச்சி), எ.ஏ.எம்.றிஸ்வி (கிண்ணியா-5),பி.எம். மஜுூத் (கிண்ணியா),எ.எச்.முர்ஜித்(கிண்ணியா), ஐ.சமுன் (அக்கரைப்பற்று-6),ஏ.குவேனி(தெட்டைதீவு), எச்.ஜுூனைதீன் (கிண்ணியா),கே.என்.றிஸ்வான் (கிண்ணியா-6),எ.எச். பரூஸ் (இரக்காமம்).

(தொடரும்)

# புத்தாண்டுப் பலன்கள் உங்களுக்கு எப்படி?

## பன்னிரு இராசிகளுக்கும் ஜனவரி மாதத்துக்குரிய பலன்கள்

### துலாம்
(சித்திரை 3 , 4 சுவாதி, விசாகம் 1,2,3)

உங்கள் ராசிக்கு இந்தக் குரு பகைவன் தான் என்றாலும் ஜன்னத்தில் நின்று 5,6,9 இந்த இல்லங்களைப் பார்ப்பதால் மட்டுமே தீமைகளை கட்டுப்படுத்தி விட்டது என்பது குறிப்பிடக்கூடயதாகும். 10இல் இருக்கும் சனி உங்கள் சுக வீட்டை பார்க்க தன்னம்பிக்கையை வளர்க்கும். சிலருக்கு போட்டிப் பந்தயம் போன்ற வழியில் சிறு ஆதாயத்தைக் கொடுக்கும். கணவன், மனைவி உறவு வகையில் பிணக்கு எதுவும் இல்லை. நின்றிருந்த காரியத்தை செய்து முடிப்பீர். கவனம் மறதியினால் சிலசமயம் செய்யும் செயல் மற்றவரை பாதிக்கும். பூமீ, வீடு வாங்கல் அல்லது கட்டுவது போன்ற நன்மைகள் இருக்கின்றன. கடிதம் எதிர்பார்ப்பது போல் முழு அளவு இல்லை என்றாலும் சில வகை நன்மை தாங்கிவரும். பெரிய மனிதர்களின் நட்பு மிகவும் நெருங்கியதாக இருக்கும். சூரியன் தேக உஷ்ண அசௌக்கியத்தையும் வயிற்றுக்கோளாறு சிகிச்சையையும் உண்டாக்குவான். ஒப்பந்தத் தொழில் செய்பவர்கள் மட்டும் சற்று அகலக் காலை வைத்து விட்டு தனநிலையில் சிரமம் உடையவர்களாக இருப்பர். தன்னம்பிக்கையோடு செயல்படுவதுதான் சிறப்பு. குடும்பத்தில் ஏற்பட்ட அவசர செலவுகளை ஈடுகட்ட சிலர் கடன் வாங்குவதும் கூட உண்டாகும். மற்றவர்கள் அன்பைப் பெறுவது, மறைத்துவைக்கப்பட்ட காரியங்கள் சிலவற்றை வெளிக்கொண்டு வருதல் மனத்திருப்திக்கும் அமைதிக்கும் காரணமாகும். மாணவ மாணவியர்க்கு கல்வி பெருமை தரும்.

இப்போது உங்களுக்கு பாதகமாக இருந்த கிரகங்கள் எல்லாம் சாதகமான எல்லைக்கு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இரு குடும்பம் உள்ளவர்களுக்கு ஒரு பகுதி திருப்தியாக இல்லை. காரியங்கள் தாமதமாகும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு அலுவலக சூழ்நிலைகள் மிகவும் இனிமையாக இருக்கின்றன. பிரயாணத்தை மேற்கொள்வது, முக்கியஸ்தர்கள் சந்திப்பு, தூரத்து சந்தோஷ செய்தி போன்றவையும் கிட்டும். பிற்பகுதியில் பழைய பிரச்சினைகள் சில தலை தூக்கி நிற்கும். மற்றவர் குறை கூறுவது உங்கள் முயற்சிகளில் தடை உண்டாக்கும். பணம் பற்றாக்குறை, குடும்பத் தேவை, பந்தயம், விளையாட்டு இவைகள் தேவையில்லை. மாணவ மாணவிகளுக்கு இது மந்தமான காலம் என்பதால் கவனித்துப் படிக்கவும். வாகன அனுகூலம் இருக்கிறது. விருந்து விழாக்களில் கலந்து கொள்வது இருக்கும். கூட்டு முயற்சியில் ஈடுபடும் தொழில் ஒன்றே சிறப்பாக இருக்கும். உங்கள் திட்டங்களை செயல்முறைக்கு கொண்டுவர அலைச்சல் இருந்து கொண்டே இருக்கும். விவசாயிகளுக்கு தொழில் வழி தனவரவு குடும்பத்தில் சில முக்கிய காரியங்களை நிறைவேற்ற உதவியாக இருக்கும். பெண் குழந்தைகளுக்கு ஆபாரண சேர்க்கை, புத்தாடைகள் சேர்க்கையும் உண்டாகும். கடன் வகை கட்டுப்பட்டதாகவே இருக்கும். பிரயாணம் முக்கியம் வாய்ந்ததாக இருக்கும். எழுத்து ஒப்பந்தம் போன்ற வகையில் நீங்கள் வெற்றியுடையவர்கள். இப்போது இந்த இராசி பெண்களுக்கு முக்கிய பிரயாணம் இருக்கிறது. ஆபரண சேர்க்கை, பட்டு உடைகள் சேர்க்கையும் உண்டாகும்.

### விருச்சிகம்
(விசாகம் 4, அனுஷம், கேட்டை)

இக்காலம் குரு மறைந்து விட்டது என்பது தவிர மற்றபடியாக எல்லாக் கிரகங்களும் அனுகூல எல்லையிலே தான் செல்கின்றன என்பது மகிழ்ச்சிக்குரியதே. 9இல் சனி என்பதும் கூட கெடுதல் அல்லவே. என்றாலும் உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு இம்மாதம் சற்று அலைச்சல் உள்ள மாதமாகவே இருந்தபோதிலும் அலுவலகப் போக்கு அமைதியாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருக்கின்றன. தன நிலைகள் நிறைவுடையது தான் என்றாலும் குடும்பத்து சுப செலவுகளுக்கு கடன் வாங்கியும் செலவழிக்க வேண்டியும் வரும். சிலர் குடும்பத்தில் குழந்தைப் பேறு மகிழ்ச்சி தருவதாகவும் வார்த்தையோடு இருந்த காரியங்கள் சில நடைமுறைக்கு வந்துவிடும். புது நட்பு, புகழ் மாலையும் கிடைக்கும்.

தமிழ் புது வருடத்தில் நல்ல வாய்ப்புக்களை உருவாக்கும் இந்த சூரியன் என்றாலும் சனியை திரும்பிப் பார்க்க தவறவேண்டாம். குரு பார்வையும் உங்கள் மீது விழுகிறது. விபத்தானாலும் தப்பித்து விடுவிர். விவசாயிகள் எல்லோர்க்கும் இதே பலன்கள் தொடரும். சனி சஞ்சலத்துக்கு காரணமாக நிற்பான். தொழில் வழியில் இருந்து வந்த தடை கள் அகன்று விட்டன. பிரயாணம் அடிக்கடி இருக்கும். இந்த ராசி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உயர்வு, அயல்நாடு செல்லும் வாய்ப்பும் சிறப்பாக அமைந்திருக்கின்றன. கொடுக்கல், வாங்கலில் உங்கள் சூழ்நிலை இப்போது முன்னேறி வருகின்றன. அடுத்தடுத்து எழுத்து வகை நன்மைகள் இருக்கின்றன. அரசாங்க வகை மனிதர்களால் சில அனுகூலமும் கடித உத்தரவும் திருப்தியளிக்கும். மாணவ, மாணவிகளுக்கு சந்தோஷச் செய்தி காத்திருக்கிறது. விருந்து கொள்வது, வேடிக்கையுமுண்டு. பிரயாணமும் பெருமைக்குரியது. விளையாட்டு, போட்டி, பந்தயமும் வெற்றி தேடி வரும். இதனால் பணமும் வரும். செலவுகளும் வரும். துரத்துச் செய்தி துக்கம் அல்லது துன்பத்தைக் கொடுப்பதாக இருக்கும். வாகனம், பிரயாணம் இதில் கவனம் மிக்கவராக இருக்கவும். வழக்கு கட்டுப்பட்டதல்ல. அலைச்சல் அதிகம். உறவினர்கள் விலகித்தான் இருப்பார். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு தனித்தொழில் பிரச்சினைகள் அனைத்தும் நன்றாகவே இருக்கும். பிறர் கூறும் அவதூறு வார்த்தைகள் குறித்து கவலைப்பட வேண்டாம். சிலருக்கு புது இல்லம் புகுதல், திருமணம் போன்ற சுபசெலவும் இருக்கும். ஆரோக்கியம் பாதித்து பின் குணமாகும். பழைய காரியங்களை முடிக்க புதிய முயற்சி அதிகரித்திருக்கின்றன. தன்னம்பிக்கையை வளர்க்க சில புதிய முயற்சிகள் பிறரால் பாராட்டையும் உதவியையும் உண்டாக்கும். கணவன், மனைவி உறவு திருப்தியாகவே இருக்கும். என்றாலும் மனைவிக்கு உஷ்ண சம்பந்தப்பட்ட நோய்கள் தோன்றி விடும் கவனம் தேவை.

### தனுசு
(மூலம் ,பூராடம், உத்தராடம் 1)

உங்களுக்கு அட்டமத்து சனி என்று கெட்டவைகளை எண்ணிக் கொண்டு மனம் புழுங்குவதைவிட குடும்பாதியான சனி 8இல் மறைந்து விட்டானே என்று எண்ணும் போது தான் தொழில் வகையில் சில வேலைகள் இன்னும் தாமதப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. தூரத்து மனிதர்களின் சந்திப்பு மன சாந்தியை மட்டும்தான் அளிக்கும். மலைவளம் சூழ்பிரதேச பிரயாணம் இம்மாதம் நடுப்பகுதியில் உண்டாகும். தாய் வகை ஆரோக்கியம் பாதித்தல், மருத்துவ செலவுகளும் குடும்பத்தில் இடம்பெறும். தொழில் கூட்டு மனிதர்களிடம் புதிய ஒப்பந்தம் உண்டாவது குறிப்பாக நன்மையாகும். அரசியல் உயர்மட்ட மனிதர்களின் சந்திப்பு அவசரப் பிரச்சினைகளை முடிக்கும் வாய்ப்பை உண்டாக்கும். இதன்மூலம் வழக்கு வகையும் நன்மையாக முடியும். மருத்துவச் செலவுகளும் சற்று கூடுதலாக இருக்கின்றன. பல்நோய், மூக்குப் பாதிப்பும் உண்டாகும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு அரசாங்க வகையினால் பாதிப்பு, உடன் இருப்பவர்களால் அதிருப்தியான போக்கும் இருக்கும். செய்து முடித்த தொழில் வழியில் சிலருக்கு பெரிய நட்டமும் இருக்கும். உங்கள் நண்பர்களுக்கு உங்கள் உதவி தான் இப்போது தேவைப்படுகிறது. பழைய கணக்குகளை சரிபார்த்து ஆவன செய்யும். போட்டி, பந்தயம், விளையாட்டு இவைகள் ஆகாது. வெளியூர் பிரயாணம் முக்கிய பங்கு வகிக்கிறது. கணவன், மனைவி அல்லது அந்நிலையில் உள்ளவர்களுக்கு புது உடை, போக்சித்தியும் உண்டாகும். நாகரீக வாகனம் கார் போன்றவைகளை விற்பதும் அவசியமாகும். குடும்பத்தில் மருந்து செலவுதான் கடுமையாக இருக்கிறது. புத்திர, புத்திரியர்கள் கல்வி மந்தமாகவே இருக்கும். வழக்கு கடன் வகை குறைந்து விடவில்லை. அதன்மூலம் சலனமான நிலையும் இருக்கிறது. அகால உறக்கம், அகால உணவு கொள்வதும் உண்டாகும். இயந்திரத் தொழிலை விரிவுபடுத்துவீர்கள். வரவேண்டிய பணத்துக்கு நீதிமன்றம் போவது, வழக்கு செலவு ஆரம்பமாகும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு எதிர்பாரா மாற்றல் மனச்சலனத்தை உண்டாக்கும். சிலருக்கு சில வகையான வழக்கு தோன்றுவதும்கூட இருக்கலாம். வெளிவட்டார மனிதர்கள் அனுகூலமாக இல்லை. குடும்பத்திலும் குழப்பமான நிலை இருந்துகொண்டே தான் இருக்கும். கணவன், மனைவியிடையே காரணமற்ற கலக்கம் உருவாகும்.

இந்த ராசி நேயர்களுக்கு தந்தை வழியில் மருத்துவச் செலவுகள் இடம்பெறும். பிரயாணம் முன்கூட்டி ஏற்பாடு செய்வது கடைசி நேரத்தில் மாற்றம் செய்ய வேண்டியிருக்கும். காது, பல் நோயும் பாதித்தது குணமாகும். மாணவ மாணவிகளுக்கு சிறப்பு மிக்க மாதமிது. சுப விஷயம் குறித்து கடிதத் தொடர்பு வருவதும் மாதக் கடைசியில் இருக்கும். நண்பர்கள் சிலர் உங்கள் மூலம் நன்மையைப் பெறுவர். தனம் கொடுக்கல் வாங்கலில் நீங்கள் தாரளப் போக்கு உள்ளவர்களே. போட்டி, பந்தயம், விளையாட்டு வகைகள் உங்களுக்கு புகழைத் தேடிக் கொடுக்கும். சிலர் திருமணம் ஏற்பது, புது குடிபுகுவது போன்ற நன்மைகள் இருக்கின்றன. நாகரிகப் பொருட்கள் குடும்பத்திற்கு அதிக செலவுகளை உண்டாக்கும். புது உடைகள் வாங்குவது, பெண்களுக்கு அணிகலன்கள் உண்டாகும்.

### மகரம்
(உத்தராடம் 2 , 3, 4, திருவோணம், அவிட்டம் 1,2 )

உங்கள் ஜன்ம அதிபதியான சனி 7இல் நேரான நோக்கில் இருப்பது நன்மையே. என்றாலும் புதுமண தம்பதிகளுக்கு நன்மை இல்லை. இது ஆண், பெண் எல்லோருக்கும் கேள்விக்குறியே. எதிர்பார்த்த வேலைகள் அமைப்பாக கூடிவருவதும் மன மகிழ்ச்சியை உண்டாக்கும். குடும்பத்துத் தேவைகள் குறித்தபடி சரிகட்டப்படும். கணவன், மனைவி உறவில் இருந்து வந்த இடைவெளி கருத்து வேறுபாடும் விலகிவிட்டன. எப்படியும் இப்போது கௌரவ செலவுகள் அதிகமாக இருக்கும். அடுத்தவர் வீட்டு ச[illegible] நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு விருந்து[illegible]பதும் இருக்கும். பிரயாணம் எதிர்பார்த்தபடி இடம்பெறுவது அல்லாமல் பெருமை தரும் நண்பர்களை சேர்த்து வைக்கும். இப்போது போட்டி, பந்தயம், விளையாட்டு போன்றவைகள் ஓரளவு ஆதாயமாகவே இருக்கும். வாகனம் இயந்திர வகையில் சம்பந்தப்பட்ட வேலைகள் மீண்டும் வேகம் பெற ஆரம்பித்து விட்டன. சத்துருக்களாக இருந்தவர்கள் சமாதான முயற்சியில் இருப்பர். சாலைத்துறையில் தொழில் உள்ளவர்களுக்கு எதிர்பாரா ஒப்பந்தத்தை கொடுப்பவன் கேதுவுடன் சேர்ந்த சுக்கிரன். கௌரவ இல்லத்து குரு சூரியன் புதனைப் பார்ப்பதால் பொதுநல வேலைகளில் ஈடுபட்டு அதன்மூலம் பாராட்டுக்ளையும் பெறுவீர்கள். உத்தியோகப் பிரிவினருக்கும் கௌரவப் பதவி பாராட்டுக்களையும் உருவாக்கும். பெண்கள் வகைக்கு வெண்மைக்கல் ஆபாரண சேர்க்கையும் உண்டாக்கும். உங்களுக்கு ஆகாத சக்திகள் கூடவே இருக்கின்றன. பதவி உயர்வு இடம் மாறுதலுக்கும் இந்த நேரம் இடம் தரவில்லை. சில குடும்பப் பொறுப்புக்களை ஏற்பதும் செலவுகளும் கடுமையாகத் தான் இருக்கும். கொடுக்கல் வாங்கலில் படிப்படியாக முன்னேற்றம் இருக்கிறது.

சந்தோஷ செய்தி தரும் மாதம். முதலில் அலைச்சலும் அவமதிப்பம் உண்டாக்கும். தோல்வி என்று நினைத்தவை உங்களுக்கு வெற்றியைக் கொடுக்கும். வைத்த வேலைகள் துரிதப் போக்கும் இப்போது நன்மை பயக்கும். நண்பர்கள், உறவினர்கள் வருகை உங்களுக்கு செலவு கொடுப்பதாக இருந்தாலும் அவர்களால் சில முக்கிய அனுகூலங்கள் இருக்கத்தான் செய்யும். சகோதர சகேதரிகள் பூசல்கள் குறைந்து வடும். மூன்றாவது மனிதர்கள் உங்களை விட்டு விலகி நிற்பர். காது பல் சம்பந்தமான பிணி பாதிக்கவும் வாய்ப்பு இருக்கிறது. உங்கள் போக்கு வேகமாக இருந்தபோதிலும் மனதில் தெளிவு இருக்காது. குடும்ப உறவில் சுபங்கள் முடித்தல், மற்றவர்களால் பாராட்டு போன்ற நன்மைகள் இருக்கின்றன. மறைமுக சக்துருக்கள் என்பது இருந்தாலும் அவர்களால் சிறு சிறு இடையூறுகளுக்கிடையே நீங்கள் வெற்றி வீரர்களாக, வீராங்கனையாகவும் திகழ்வீர்கள்.

### கும்பம்
(அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3 )

உங்கள் ஜன்ம அதிபதியானவன் சனி 6இல் மறைந்து விட்டான். எனவே எதிலும் தைரியம் குறைந்தவராகவே செயல்படுவீர் என்பது குறிப்பிடத்தக்கது. உடன் இருந்தவர்கள் சிலர் இப்போது உங்களுடன் இல்லை. அவர்கள் விலகி இருப்பது வேண்டாம். புகழ்ச்சிக்காக செலவிடுவதைத் தவிர்க்கவும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு இடமாற்றம் உண்டு. சீரான போக்கு உடையவர்களாக இருப்பர். காலம் கடந்து போன விஷயங்கள் சிலவற்றில் கவன ஈர்ப்பு அதிகமாக இருக்கும். மூன்றாவது மனிதர்கள் வார்த்தைக்கு அதிக மதிப்பு கொடுத்து நடக்க வேண்டியதிருக்கும். அலைச்சல் அதிகமாக இருந்த போதிலும் தொடர்ந்து வேலைகள் நடைபெறாமல் முடிந்து விடும். இரு குடும்பம் உள்ளவர்களுக்கு மறுபகுதி திருப்தியாக இல்லை. கலைப்பிரிவினர்களுக்கு கடைசியில் அதிகமான நன்மைகள் இருக்கின்றன. வழக்கு வேகம் குறைந்துவிடும். சிலருக்கு எதிர்பாரா தனமும் வந்து சேரும். அரசியல் மனிதர்களை விட நீங்கள் திறமைசாலிகளாக இருப்பீர். சில முக்கிய உத்திரவைப் பெறுவதற்கு காரிய சாதனை புரிந்து விடுவீர்கள். உங்களுக்குத் தொடர்ந்து நன்மைகள் இருக்கின்றன. தொழில் வழியில் திடீர் உதவி உயர்வும் உண்டாகும். இந்த நேரத்தில் பழைய மனிதர்கள் சிலரின் உதவியை நாட வேண்டியிருக்கும். தனம் கொடுக்கல், பணம் கொடுக்கல் வாங்கல் தொழில் முயற்சி இவைகள் அனு கூலமாகவே இருக்கும். பூர்வீக சொத்து சிலவற்றை விற்பதற்கு முயற்சித்து இப்போது கைகூடி வந்துவிடும் என்பதுடன் கடனை அடைக்கச் சரியாக இருக்கும்.

செவ்வாய் உங்கள் ராசிக்கு பாக்ய கிரகமாயிற்றே. கட்டடம், மனை வாங்குவதும் உண்டாகும். குடும்பப்பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வைக் கொண்டுவரும் என்பதில் சந்தேகமில்லை. செவ்வாய் திருமணம் போன்ற சுபப் பேச்சுக்களும் இல்லாமல் இல்லை. சிலர் தவிர்க்கமுடியாத இடமாற்றத்தைப் பெறுவதும் சில தூரத்து சந்தோஷ செய்தியும் தரும். வழக்கு இருப்பவர்களுக்கு இந்த சூழ்நிலை இருக்கும். பிரயாணத்தை மேற்கொள்வது கிட்டும். பிற்பகுதியில் பழைய பிரச்சினைகள் சில தலைதூக்கி நிற்கும். மற்றவர் குறை கூறுவர். தொழிலைக் கவனிக்கவும். எதிர்பார்த்த வேலைகள் அமைப்பாகக் கூடி வருவதும் மனமகிழ்ச்சியை உணடாக்கும். தொழில் வழி கடன்களை இப்போது அடையாது என்றாலும் பாதிப்புக் கொடுக்காது. குடும்பத்தேவைகள் நெருக்கடியில்தான் பூர்த்திசெய்யப்படுகிறது. சில வகை கூட்டு முயற்சியும் பலன் தரும் அளவுக்கு உருவாக்கப்பட்டுவரும். உங்கள் சத்ருக்கள் இப்போது பலம் குன்றியவர்களாக ஆகிவிடுவர். வழக்குப் பயம் வேண்டாம். வார்த்தையைக் குறித்தபடி காப்பாற்றிவிடவும் முடியும். வேண்டாதவர்கள் சிலரையும் இப்போது சந்திக்கவேண்டிய அவசியம் நேரிடும்.

### மீனம்
(பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி)

உங்கள் ஆட்சி நாயகன் குரு 8இல் மறைந்து விட்டான் என்று மனம் சஞ்சலப்படுவதை விட ஜென்மத்து ராகுவைப் பற்றியே கவலைப்பட வேண்டும். குடும்பத்திற்கு சில நாகரிக பொருள் வகையில் சேரும். காலம், புண்ணியஸ்தல பிரயாண நன்மைகள் இருக்கின்றன. சிலசமயம் கால்நடையாக நடந்துசெல்லவேண்டியும் ஏற்படலாம். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். கடன் வழக்கு வகையும் கட்டுப்பட்டுத்தான் இருக்கும். சுயதொழில் உள்ளவர்களில் கலைப்பிரிவினருக்குத்தான் சற்று வேகமான முன்னேற்றம் இருக்கிறது. சுக்கிரன்தான் இப்போது பணம் கொடுக்கல் வாங்கலையும் பண்போடு நடத்த உதவியாக இருக்கின்றான்.

இந்த நேரத்தில் உங்கள் செய்தொழில் வழியை சீரமைத்துக்கொள்ளவும் நண்பர்களின் இயக்கத்தைக் கவனித்துக்கொள்ளுங்கள். அவர்கள் உங்களுக்கு எதிராகவும் செயல்படும் வாய்ப்பு இருக்கிறது. இந்த வருடம் எத்தனையோ எதிர்ப்புகளுக்கிடையில் ஓரளவு வளர்ந்தவர், அடுத்த ஆண்டைத்தான் பெரும் முன்னேற்றத்திற்குத் துணை. புதுமனை புகுவிழாவும் செய்வர். அரசியல் வாதிகள் நெருங்கிய தொடர்பு மகிழ்ச்சி தருவதாக அமைந்திருக்கும். இப்பிரிவு விவசாயிகளுக்கு பெருமை தரும் காலமாகும். உப தொழில் வழியும் வெளிச்சம் பெற்றுவிட்டது. அரசாங்க உயர் மனிதர்கள் மூலம் பாராட்டுக்களும் இருக்கும். வழக்குப் பாதிப்பு இல்லை. இயந்திரம் வாகனத்தொழில் செய்பவர்களுக்கு வரவு இருக்கும். ஆரோக்கியத்தில் கவலை இல்லை. குழந்தைகள் மனைவி இந்தவகையில் சிறுசிறு சச்சரவுகள் இடம்பெறும். தெய்வவழிபாடு மன அமைதியை உண்டாக்கும். மேற்குத் திக்கு மனிதர்களின் வருகை பேச்சு வகையில் திருப்தியளிக்கும். உத்தியோகப் பிரிவினர்கள் தொழிலாளர்களுக்கு இது வேதனையான மாதமாகும். தேக உஷ்ண அசௌக்கியம் மருத்துவச் செலவுகள் தவிர்க்க முடியாதவை.

இப்போது உங்கள் நெருங்கிய நட்புக்கு உரியவர்கள் அரசியல் உயர்மட்ட மனிதர்கள். கணவன், மனைவி உறவு கனிவுகொண்டதாக இருக்கும். சில சுபவிஷயம் குறித்த முடிவுகளை கூடிப்பேசி முடிவு எடுப்பதும் இருக்கும். எதிலும் பாதிப்பு இல்லை. உங்கள் நண்பர்கள் சிலர் உயர்ந்த அம்சத்தில் இருப்பர். இந்த ராசி மாணவ மாணவியர்களுக்கு தேர்வு நல்ல கௌரவத்தைக் கொடுப்பதாக அமைந்திருக்கும். கௌரவ உயர்விற்கு சில கௌரவப் பதவியும் கூட இப்போது வந்துசேரும். குடும்பத்து உறவினர் நண்பர்களும் இணைந்திருந்து செயற்படுவதால் உங்கள் செயல்முறையும் மற்றவர்களால் பாராட்டப்படும். சகோதர வழி வகையில் சிறு இடைவெளி உண்டாகும். தனம், கொடுக்கல் வாங்கல் வேகமாக இல்லையே தவிர காரிய சாதனை மெல்ல நடந்துகொண்டுதான் இருக்கும்.

(தொடரும்)

# வெற்றிவேல் & சக்திவேல்

## திரை விமர்சனம்


குடும்ப உறவில் ஏற்படும் சவால்களைச் சமாளித்து வெற்றி பெறும் கதை.

புடைவைக் கடை அதிபர் வெற்றிவேல் ஐ.பி.எஸ். படித்திருக்கும் அவரது மகன் சக்திவேலை கடையைக் கவனித்துக்கொள்ளும்படி சொல்கிறார். இந்த நிலையில் சக்திவேல் அவனது அத்தை மகளைக் காதலிக்கிறான். இதற்கு வெற்றிவேல் எதிர்ப்பு தெரிவிக்கிறார்.

மகனை பணக்கார குடும்பத்தில் திருமணம் செய்து கொடுக்கிறார். தெளிந்த நீரோடை போல் சென்ற வெற்றிவேலின் குடுப உறவில் பல் குழப்பங்கள், மகளுடைய கணவன், மாமனார் எல்லோருமே பொலிஸாரால் தேடப்படும் தீவிரவாதிகள் என்பது தெரியவருகிறது.

உடைந்து போகும் வெற்றிவேலுக்கு சக்திவேல் எப்படிக் கை கொடுத்தான்? சோதனைகளை வென்றார்களா? காதலியுடன் சக்திவேல் சேர்ந்தானா... என்பதை ஆக்ஷனுடன் பாசத்தைக் கலந்து சொல்லி இருக்கிறார்கள்.

வெற்றிவேலாக சத்யராஜ். வழக்கமான அதிரடி அக்ஷனில் இருந்து விலகி, அடக்கமான பொறுப்புள்ள



முறுக்கு மீசை அப்பாவாக மாறியிருக்கிறார். குஷ்புவிடம் செய்யும் குறும்பு, எம். ஜி.ஆர் பாடலுக்கு இருவரும் போடும் ஆட்டம் கலகலப்பு. சண்டைக் காட்சிகளிலும் ஊதித் தள்ளுகிறார்.

மகன் சக்திவேலாக சிபி. மகனுக்காக அப்பா நிறைய விட்டுக் கொடுத்திருக்கிறார். சிபி அதில் புகுந்து விளையாடி இருக்கிறார். காதல், குடும்ப பாசம், அடிதடி, கலாட்டா, கிண்டல், கேலி என்று எல்லா கோணங்களிலும் 'பாஸ் மார்க்' வாங்கிவிட்டார். சத்யராஜின் வாரிசு என்பதை அப்படியே பிரதிபலிக்கிறார். தனிப்பாணி உருவாக்க முயற்சி செய்யலாம்.


அக்கறையுள்ள அம்மாவாக குஷ்பு. நடிப்பில் அனுபவ முத்திரையை ஆழமாக பதித்திருக்கிறார். சத்யராஜ் குறும்பு, சிபி நையாண்டி, வடிவேலு கலாட்டா எல்லாவற்றுக்கும் ஈடுகொடுத்து குடும்ப பாசத்தை பிரதிபலிக்கிறார். சத்யராஜ் ஆஸ்பத்திரியில் இருக்கும்போது குமுறும் குஷ்புவைப் பார்க்கும் போது... இத்தனை பெரிய திறமைசாலி ஏன் வீணாக வாயைத் திறந்து ஊர்எதிர்ப்பை சம்பாதித்தார் என்று பரிதாபப்படத் தோன்றுகிறது.

சிபியின் தாய் மாமனாக வடிவேலு. படம் முழுவதும் வந்து கிச்சு கிச்சு மூட்டுகிறார். ரீ கடையில் செய்யும் கலாட்டா வெடிச் சிரிப்பு. சத்யராஜுக்கும் சிபிக்குமிடையே அவர் மாட்டிக் கொண்டு தவிப்பதும், குஷ்புவிடம் புலம்புவதும் வயிற்றைப் புண்ணாக்கும் சிபி ஜோடியாக நிகிதா. முறைப் பொண்ணாக வந்து விரட்டி விரட்டிக் காதலிக்கிறார். மாமாவின் வீட்டுக்கு வந்து, அத்தை – மாமாவுடன் ரசிகர்களையும் திரும்பிப் பார்க்க வைக்கிறார்.

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் லட்சுமி பிரியன். முதல் பாதியைத் தெளிவாகக் கொண்டு போகிறார். பின் பாதியில் அதிரடி அக்ஷன், மோதல் கொலை என்று பரபரப்பாக கதையை அமைதிருக்கிறார். ஆரம்பத்தில் இருந்தே இன்னும் அழுத்தமாக கதை சொல்லியிருக்கலாம்.

காசி விஷ்வா ஒளிப்பதிவு குளுமை, ஸ்ரீகாந்த் தேவாவின் இசையில் பாடல்கள் பரவாயில்லை. ஆபாச கலப்பு இல்லாததை பாராட்டலாம்.

*தந்தை – மகன் கூட்டணிக்கு வெற்றி பெறும் சக்தி இருக்கிறது.*



'ஆச்சார்யா'
விக்னேஷ் – திவ்யா

# இதயத்தில் இடம்



'ஜெயம்' ரவி ஜோடியாக 'ஜெயம்' படத்தில் அறிமுகமான சதா எம்.குமரன் சன் ஒப் மகாலட்சுமியில் அறிமுகமான அசின், 'தாஸ்' பட நாயகி ரேணுகா மேனன் 'மழை' படத்தில் ரவியுடன் ஜோடி சேர்ந்த ஸ்ரேயா என்று எல்லோருமே இன்று 'பிசி' நடிகைகள்.

இப்போது 'இதயத்திருடன்' படத்தில் முப்பை நடிகை காம்னா ஜெயம் ரவியுடன் ஜோடி சேர்ந்திருக்கிறார். படம் ரிலீஸ் ஆகும்வரை வேறு படங்களை ஏற்கமாட்டேன் என்கிறார். இந்தப் படம் தமிழ் ரசிகர்களின் இதயத்தில் தனக்குத் தனி இடத்தைப் பிடித்துக் கொடுக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார் காம்னா. ஆசை பலிக்குமா...?

# முயற்சி

அசின் விஜய்யுடன் ஜோடி சேர்ந்து நடித்த 'சிவகாசி' படம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது.



இது போல விக்ரம் நடித்த 'மஜா' படமும் வெற்றி பெற்றுள்ளது.

இப்போது அஜீத்துடன் 'காட்பாதர்' படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படமும் எதிர்பார்த்தை விட நன்றாக வந்திருக்கிறதாம். எனவே இந்த 3 நாயகர்களுடனும் தொடர்ந்து நடிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறாராம் அசின்.

# தயாரிப்பாளர் ஆகும் ஜோதிகா

சூர்யா தயாரித்து நடிக்கும் 'ஜில்லுன்னு ஒரு காதல்' படத்தில் ஜோதிகா ஜோடி சேர்வது பழைய தகவல். இந்தப் படத்தின் தொடக்க விழாவை விமானத்தில் நடத்த முடிவு செய்து அதற்கு செலவிடத் திட்டமிட்டிருந்த ரூ.5 இலட்சத்தை சூர்யா வெள்ள நிவாரண நிதியாக முதல் அமைச்சரிடம் வழங்கியதும்,

சைதாப்பேட்டை பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ரூ.1.5 இலட்சம் மதிப்புள்ள போர்வைகளை அவர் கொடுத்ததும் 'லேட்டஸ்ட்' தகவல்கள்.

அதைவிட புதிதாக ஒரு செய்தி ஜோதிகாவும், ஒரு படக் கம்பெனி தொடங்கி படம் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறார் என்பதுதான். அதிலும் ஜோதிகாவின் கதாநாயகன் சூர்யா தான்.

## 'அவதாரம்' ஆரம்பம்

கமலின் 'வேட்டையாடு விளையாடு' படப்பிடிப்பு அமெரிக்காவில் தொடங்கி... சென்னையில் தொடர்ந்து இறுதி கட்டத்துக்கு வந்துவிட்டது. இந்தநிலையில் கமல் அவரது 'தசாவதாரம்' படத்துக்கான வேலைகளில் தீவிரமாக இறங்கிவிட்டார். விரைவில் அவதார அறிவிப்பு வருகிறது.



# சினிமாச் சிதறல்



# லைலாவுக்கு விரைவில் திருமணம்



நடிகை லைலாவுக்கு அவரது குடும்பத்தார் மாப்பிள்ளை பார்த்து வருகிறார்கள்.

விரைவில் அவரது திருமணம் நிச்சயமாகும் எனத் தெரிகிறது. 'கள்ளழகர்' படம் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் லைலா. மும்பையைச் சேர்ந்தவர்.

தமிழ், இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னட மொழிகளில் ஏராளமான படங்களில் நடித்துள்ளார்.

தற்போது அஜீத்துடன் 'பரமசிவன்', மோகன் லாலுடன் ஒரு மலையாளப் படத்தில் அவர் நடித்து வருகிறார். இது தவிர புதுப்படங்கள் எதையும் அவர் ஏற்கவில்லை.

பிரசாந்துடன் 'பெட்ரோல்' படத்தில் நடிக்க வந்த வாய்ப்பையும் அவர் மறுத்துவிட்டார் என கோலிவுட் வட்டாரங்கள் தெரிவித்தன.

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை


6 மீள்பார்வை



அப்போது எனக்கு மூன்று அல்லது நான்கு வயதிருக்கும். எங்களது வீட்டிற்கு முன்னாள் ஒரு கிறிஸ்தவப் பள்ளிக்கூடம் இருந்தது. அதில் தான் என்னைப் படிக்க வைத்தார்கள். கிறிஸ்தவ மக்களுக்கு நமது இந்திய மக்கள் எல்லோரும் மிகவும் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம் ஏன் என்றால் அப்போதெல்லாம் கிறிஸ்தவப் பள்ளிகள் மட்டுமே மிக அதிகமாக இருந்தன. அதில் தான் அதிகம் பெயர் படித்த்வர்கள் இருக்கிறார்கள். உதாரணமாக நமது நாட்டின் ஜனாதிபதியாக இருந்த டாக்டர் ராதா கிருஸ்ணன் அவர்களே அது மாதிரியான பள்ளியில் படித்தவர் தான். நானும் கிறிஸ்தவ பள்ளிக்கூடத்தில் படித்தவன் தான்.

மூன்றரை வயது முதல் அங்கு தான் படித்து வந்தேன். நான் சின்னப் பிள்ளையாக இருக்கும் போது அந்தப் பள்ளிக்கூடத்தில் நானே ஓடிவிடுவேன். எனக்கு நாலரை வயதிருக்கும் போது, எனது தந்தை ஜெயிலிருந்து விடுதலையாகி வந்தார்.

பிற்காலத்தில் நான் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் போது எனது நண்பர் அரக்கோணம் ராஜகோபால், ஒரு முறை என்னை, என் அப்பா இருந்த வேலூர் ஜெயிலுக்கு அழைத்துச் சென்றார். அங்கே எனது அப்பா தங்கியிருந்த அறையைக் காண்பித்தார்.



பெற்றோருடன் சிவாஜி கணேசன்

எனது தகப்பனாரின் நன்னடத்தைக்காகவும், அவர் ஒரு பெரிய மெக்கானிக் என்பதாலும், எல்லா வேலைகளையும் அவர் தான் சிறையில் செய்து முடிப்பாராம். அங்கே ஒரு பெரிய டேங்க் இருந்ததாம். அது சரித்திரப் புகழ் பெற்றதாம். அந்த டேங்கில் தண்ணீர் ஒழுகிய படியே இருக்கிறது. எனது அப்பா தான் அதை சரிசெய்தாக சொன்னார்கள்.

ஆகவே அவரது நன்னத்தையின் காரணமாக, கொடுக்கப்பட்ட ஏழு வருட தண்டனையைக் குறைத்து, நாலரை வருடத்திலேயே விடுதலை செய்து விட்டார்கள் . என்னை என் தகப்பனார் பார்க்கவரும் பொழுது , எனக்கு நாலரை வயதிருக்கும். அதை எப்படிச் சொல்வேன், வேதனையாக இருக்கிறது.

பிறந்து நாலரை வருடங்கள் கழித்து எனது அம்மா, எனது அப்பாவை காண்பித்து "இவர் தான் உன் தகப்பகனார்" என்று கூறினார்கள்.

பாருங்கள் ! நாட்டினுடைய விடுதலைக்காக பாடுபட்டவர்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்று . இதையெல்லோரும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். "சுதந்திரம் ஏன் கிடைத்தது?" என்று நிறையப் பேர் கேட்கிறார்கள். அவர்கள் எல்லாம் பைத்தியக்காரர்கள் . "சுதந்திரம் நமக்கு என்ன செய்தது?" என்றும் கேட்கிறார்கள். இந்த நாட்டிற்கு நீ என்ன செய்தாய் என்பது போக , நாடு எனக்கு என்ன செய்தது? என்று கேட்கிறார்கள். சிலர் சோம்பேறிகளாக இருந்து கொண்டு வேலையே செய்வதில்லை. அவர்களுக்கு எல்லாம் சுதந்திரம் சோறு போடுமா என்ன?

"சும்மா கிடைத்ததா சுதந்திரம்? தண்ணீர் விட்டா வளர்த்தோம்? கண்ணீர் விட்டல்லவா காத்தோம். எவ்வளவோ கஷ்டப்பட்டு, நமது பெரியவர்கள் எல்லோரும் சேர்ந்து உருவாக்கியது நம் சுந்திரம் " தேச் விடுதலைக்காக எத்தனை குடும்பங்கள் கஷ்டப்பட்டிருக்கும்? உதாரணமாக நான் இருக் கிறேன் அல்லவா பார்த்துக்கொள்ளுங்கள்.

## நாடகமேடை அரங்கேற்றம்

டி.எஸ்.என்: பள்ளிப் பருவத்திலேயே உங்களுக்கு நாடகத்திலும், கலையிலும் ஈடுபாடும் ஆர்வமும் இருந்ததா?

சிவாஜி: ஆமாம். அப்பொழுதே எனக்கு கலை ஆர்வம் மிக அதிகம். கலை மீது பைத்தியம் உண்டு. ஏனென்றால் பள்ளிக்கூடத்தில் பாடுவதும், நாடகத்தில் வசனம் பேசுவதும் எனக்கு அதிகப் பிரியம். எனது தகப்பானார் வந்த பிறகு, கொஞ்சம் வளர்ந்து எனக்கு ஏழுவயதான போது ஒரு முக்கிய மான சம்பவம் நிகழ்ந்தது. அந்தக்காலத்தில் கம்பளத்தார் கூத்து என்று நடத்துவார்கள் .அதில் கட்டப் பொம்மன் நாடகம் நாடத்துவார்கள். அந்தக் கூத்து எங்கள் வீட்டின் முன் நடந்து கொண்டுடிருந்தது.

டி.எஸ்.என்: கம்பளத்தார் கூத்து என்பது ஒரு வகையான கூத்தா? அல்லது, குறிப்பிட்ட இனத்தார் நடத்தும் நாடகமா?

சிவாஜி: கம்பளத்தார் கூத்து என்றால் கட்டப்பொம்மன் நாடகத்தை மட்டும்தான் சொல்வார்கள் . ஏனெனில் கட்டப்பொம்மனே கம்பளத்து நாயக்கர் தானே கம்பளத்தாரின் 47ஆவது தலைமுறையில் வந்தவன் கட்டப்பொம்மன். 47 தலைமுறைக்கு முன்னால் தமிழ் நாட்டிலும் வந்தவர்கள் அவர்கள்.

நமது பாண்டியராஜா ஒரு முறை ஒரு பயில்வானை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டு கூடவே வைத்துக்கொண்டாராம். ஏனெனில் அந்தப் பையில்வான் பெரிய தீவெட்டி கொள்ளைக்காரர்களைப் பிடித்துக்கொடுத்து நாட்டுமக்களுக்கு நன்மை செய்தாராம். அதனால் அவரை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டு, அவருக்கு என்னென்ன தேவையோ, அதை மன்னர் செய்து கொடுத்தாராம். அந்தப் பரம் பரையில் வந்தவன் தான் வீரபாண்டிய கட்டப்பொம்மன் அவன் தான் வெள்ளையனை எதிர்த்துப் போராடியதாக நான் சின்னப் பிள்ளையாக இருக்கும் போது எங்களுக்குச் சொல்வார்கள்.

எனது தகப்பனாருக்கு கட்டப்பொம்மன் நாடகத்தின் மீது அதிகப் பிரியம். ஒரு முறை அவர் அந்த நாடகத்தை பார்ப்பதற்குச் சென்றார். அப்பாவுடன் நானும் சென்றேன். இருவரும் நாடகம் பார்த் துக் கொண்டிருந்தோம். அப்பொழுதெல்லாம், முக்கிய வேஷம் போடுபவர்களைத் தவிர, ஒரு சில காட்சிகளில் மட்டும் தோன்றும் வேஷங்களுக்கு தேவையான சின்னப்பிள்ளைகளை நாடகத்துக்காரர்கள் அழைத்துவரமட்டார்கள்.

நாடகம் நடத்தும் போது, நாடகம் பார்க்க வரும் குழந்தைகளைப் பிடித்து மேடைஏற்றி விடுவார்கள். அன்றைக்கு நான் முன்னால் உட்கார்ந்து நாடகம் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது என்னைப் பிடித்து மேடை ஏற்றி விட்டார்கள். எனது அப்பாவுக்கு யார் எதிரியோ, அந்த வெள்ளைக்கார பட்டாளத்தில் ஒருவனாக என்னை அழைத்துச் சென்று நிறுத்தி நடிக்க வைத்துவிட் டார்கள். பசங்கள் எல்லோரும் வெள்ளைக்காரப் பட்டாளம் போல் நடந்துவந்ததைப் பார்த்து, மக்கள் கைதட்டினார்கள் . அன்று தான் என் முதல் நாடகம் அரங்கேறியது. நாடகம் முடிந்து வீட்டிற்கு வந்தேன் .எனது அப்பா வீட்டிற்கு வந்தவுடனே என்னை முதுகில் அடித்தார். (தொடரும்)

# வேலி மறைப்புகள் அகற்றப்படுகின்றன

(மந்துவில்)

ஏ-9 கண்டிவீதியில் தென்மராட்சிப் பகுதியில் வீதியின் இரு மருங்கிலும் அமைந்துள்ள வேலிகள் மறைப்புக்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

வீதிகளில் மறைந்திருந்து கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப் படலாம் என்ற அச்சத்தில் இவ்வேலிகளை அகற்றுமாறு கேட்கப்பட்டுள்ளதிற்கு இணங்கவே இவ் வேலிகள் அகற்றப் பட்டு வருகின்றன.

அத்துடன் வீதிகளில் இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன. வீதிகளில் செல்லும் வாகனங்கள் நிறுத்தப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில்-அப்பகுதி வீதிகளில் மோட்டார் சைககிள் பாவனைகள் குறைந்துள்ளதுடன் மக்களின் நடமாடடமும் வீதிகளில் மிகவும் குறைந்து காணப்படுகின்றது. (ர-102)

# ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொலிஸாருக்கு இடமாற்றம்

(கொழும்பு)


அரசியல்வாதிகளின் தேவைகளுக்காக ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொலிஸாருக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுமார்100 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள அதற்கு கீழுள்ள பதவிகளில் இருப்போர் என சுமார் ஆயிரம் பேரை தற்போதிருக்கும் பொலிஸ நிலையங்களிலிருந்து அகற்றுவதற்கான திட்டங்கள் தலைமையகத்திற்குள் செயற்படுத்தப்படுவதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.


அனுராதபுரம் மாவட்டத்தில் மட்டும் கடந்த சில நாள்களில் 150 இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படடுள்ளன. அனுதாரபுரத்தைச் சேர்ந்த முக்கிய அரசியல்வாதியின் அழுத்தங்கள் காரணமாக இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

எதிாவரும் நாட்களில் அனுராதபுரம் மாவட்டததில் மேலும் பல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளை அந்தப் பதவிகளிலிருந்து அகற்றி சாதாரண கடமைகளில் ஈடுபடுத்துவதற்கான அரசியல் ரீதியான திட்டமும் தற்போது செயற்படுத்தப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியல்வாதிகளின் தேவைகளுக்காகவே இந்த அனைத்து இடமாற்றங்களும் இடம்பெறுவதாகவும் இதில் அமைச்சர்கள் மற்றும் பிரதேச முக்கிய அரசியல்வாதிகள் ஈடுபட்டிருப்பதாகவும் பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ர)







உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு அண்மையில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்ட இளம்குடும்பஸ்தரின் சடலத்தை முதலாவது படத்திலும், சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்ப்பாண பதில் நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் விசாரணை மேற்கொள்வதை இரண்டாவது படத்திலும், பிரஸ்தாப குடும்பஸ்தரின் உறவினர்கள கதறிஅழுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்

## இன்று ஒரு தகவல்

# விடியல் நேரம்

ஒருவர் வந்தார். "வாருங்கள் சார்! உட்காருங்கள்" என்றேன்."புதுவருடம் பிறந்திருக்கிறது அது தான் வாழ்த்துச்சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்றார். "மிகவும் சந்தோஷசம்" என்றேன். "போனவருட துன்பமெல்லாம் போனவருடத்துடன் போகட்டும் இந்த வருடம் நல்ல விதமாக அமையட்டும் இது நமக்கு எல்லா நன்மைகளையும் தரட்டும்" என்றார்.

ஒவ்வொரு வருடமும் நாம் இப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு நாளும் புதிதுபுதிதாகத் தான் விடிந்துகொண்டிருக்கிறது. வரும் போது வெளிச்சம்! போகும் போது இருட்டு அது சரி...உண்மையான விடியல் என்பது என்ன? இதே கேள்வியை ஒரு துறவி தன்னிடமிருந்த சீடர்களைப் பார்த்து கேட்டாராம். "விடியல் நேரம் என்று சொல்கிறோமே... அது எந்த நேரம் என்று உங்களால் துல்லியமாகக் கூற முடியுமா? " என்று கேட்டாராம்.

சீடர்கள் யோசிக்க ஆரம்பித்தார்கள். ஒரு சீடர் எழுந்தார். "நான் சொல்கிறேன்" என்றார். சொல் என்றார் சீடர். "தொலைவில் வரக்கூடிய ஒரு மிருகம் ஆடா அல்லது மாட என்று இனம் கண்டு கொள்ளும் நேரம் இருக்கிறது பாருங்கள்... அது தான் விடியல் நேரம்" என்று விளக்கம் கொடுத்தார் அவர்.

"அது சரியான பதில் இல்லை. விடியல் நேரம் அது இல்லை " என்று கூறிவிட்டார் துறவி. இன்னொரு சீடர் எழுந்தார். "நான் அதற்குப் பதில் சொல்கிறேன்" என்றார். "சொல்" என்றார் துறவி. "ஒரு மரம்... இருக்கிறது... அது ஆலமரமா? அல்லது அரச மரமா? என்று அடையாளம் காணக்கூடிய நேரம் இருக்கிறது பாருங்கள்... அதுதான் விடியல் நேரம்" என்றார். "அதுவும் சரியான பதில் இல்லை" என்று சொல்லிவிட்டார் துறவி.

அதன்பின்பு எந்த சீடனும் எழுந்திருக்கவில்லை. 'இதற்கு மேலும் நான் விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தோம் என்றால் நமது அசட்டுத்தனம் தான் வெளியே தெரியும்" என்று புரிந்துகொண்டனர். அதனால் பேசாமல் இருந்து விட்டார்கள். "சுவாமி நீங்களே சரியான பதிலை கூறிவிடுங்கள்.... உண்மையிலேயே "விடியல் நேரம் என்பது எது என்று கேட்டார்கள். இப்போது அந்த துறவி பதில சொல்கிறார். "நம்முடைய உதவியை நாடி வரும் ஒரு ஆண் நமதுசகோதரன் என்றும், அதுபோல் வரக் கூடிய ஒரு பெண் நமது சகோதரி என்று நினைக்கக் கூடிய ஒரு நேரம் இருக்கிறதே... அது தான் விடியல் நேரம்" என்று விளக்கம் கொடுத்தார் அந்தத் துறவி.

இந்தப் பெரியவர் கூறும் அடிப்படையில் வைத்துப் பார்த்தால் இன்னும் நமக்கு விடிவுகாலம், விடியல் நேரம் வந்ததாகத் தெரியவில்லையே. அடுத்தவர்களை சகோதரியாகவும் சகோதரனாகவும் நினைக்கும் சகோதரர்களையா இந்தக் காலத்தில் பார்க்க முடிகிறது. அடித்துவிரட்டுவதும நீவேறு நான் வேறுஎன்ற நினைப்பும் தானே இப்போது அதிகமாகிவிட்டது. அப்படி இருக்கும் போது.... புதுவருடம் பிறந்துவிட்டது என்பது போல் புதுவெளிச்சம் கொடுத்து விட்டது என்பதும் பொய் தானே ஒருவருக்குகொருவர் வாழ்த்துத்தெரிவிப்பது என்பதில் கூட எவ்வளவு பித்தலாட்டம் தெரியுமா?

ஒருவர் வந்தார். இன்னொருவரைப் பார்த்து 'சார்! நான் புத்தாண்டு வாழ்த்து அனுப்பினேனே அது உங்களுக்கு கிடைத்ததா?" என்றார். "ஓ! கிடைத்ததே... நானும் பதில் வாழ்த்து அனுப்பினேனே" என்றார் இவர். உடனே இவர் ஏன் சார் பொய் சொல்கிறீர்கள்? நான் உங்களுக்கு புத்தாண்டு வாழ்த்து அனுப்பவே இல்லையே சும்மா சொல்லிப் பார்த்தேன்... உடனே கிடைத்தது என்று கூறினீர்களே என்றார் அவர்.

அதற்கு இவர் 'ஏன் சார் ? வாழ்த்து அனுப்பியதாக நீங்கள் பொய்சொல்கிறீர்கள் அப்படியிருக்கும் போது.... அது கிடைத்ததாக நான் பொய் சொல்லக்கூடாத" என்றார்.

இவர்களுக்கு எல்லாம் எப்போது சார் விடிவு காலம்.?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பாடசாலைகள் நாளை ஆரம்பம்

(கொழும்பு)

2006ஆம் கல்வியாண்டுக்காக பாடசாலைகள் யாவும் நாளை ஆரம்பமாகவுள்ளதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் என்.ஜீ.பீ.நவரட்ண தெரிவித்துள்ளார். நாட்டின் சகல அரசாங்க தமிழ், சிங்கள, முஸ்லிம் பாடசாலைகளும் 2006ஆம் கல்வியாண்டின் முதலாமதவணை கல்வி நடவடிக்கைகளுக்காக நாளை திறக்கப்படவுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி இப் பாடசாலைகளின் முதலாம் தவணை கலவி நடவடிககைகள் நிறைவு பெறும்.

இதேவேளை, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் இடம்பெறும் நிலையங்களாகச் செயற்படும் பாடசாலைகள் எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள ளது. (ற-8)

# அனுசரணையாளராக எரிக் தொடரவேண்டுமா? நோர்வேயை தீர்மானிக்கக் கோருகிறது ஜே.வி.பி

(கொழும்பு)

"சமாதான பேச்சுகள் எங்கு நடைபெறவேண்டும் என்ற விடயம் பற்றி விவாதிப்பதில் அர்த்தம் இல்லை பேச்சு நடைபெறும் இடம்பற்றி நோர்வே கவலைப் படவில்லை. ஆனால் சமாதானப் பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிக்கபடவேண்டும் என்பதே நோர்வேயின் கவலை" என நோர்வேயின் சிறப்பு சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்த கருத்திற்கு ஜே.வி.பியின் அரசில் பீடம் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

இறமையுள்ள ஓர் அரசாங்கத்திற்கு சமாதான அனுசாரணையாளர் என்ற வகையில் உத்தரவுகளை பிறப்பிப்பதற்கு சொல்ஹெய்முக்கு எந்த உரிமையும் கிடையாது என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்ற தன் பின்னர் 50 வரையான படையினர் கொல்லப்பட்டு விட்டனர். இவ்வாறான படுகொலைகள் யுத்த நிறுத்த மீறல்களே. படையினர் மிக உயர்ந்த பொறுமையை கடைப்பிடிக்காதிருந்தால் இன்று நிலைமை வேறாக இருந்திருக்கும்.

இந்நிலையில் இரு தரப்பினரையும் ஒரே கண்ணோடடத்தில் விழித்து நோர்வே கண்டன அறிக்கை வெளியிடுவதில் நியாயமே இல்லை. யுத்த நிறுத்த மீறல்களை விடுதலைப் புலிகளே புரிந்துள்ளனர்.

இக்கொலைகளுக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு எனக் கூறி அவர்களை நேரடியாக எரிக் சொல்ஹெய்ம் கண்டிக்கவில்லை.

பேச்சுகள் நடைபெறும் இடம்பற்றி நோர்வேக்கு அக்கறையில்லாதிருக்கலாம் .ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரை எமக்கு அது முக்கியமான ஒன்று எரிக்சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளுக்கு உத்தரவுகளை பிறப்பிப்பது பற்றி எமக்கு கவலையில்லை. ஆனால அரசாங்கத்திற்கு அவர் உத்தரவுகளை பிறப்பிக்க முடியாது.

தனக்களிக்கப்படடுள்ள அதிகாரங்கள் எவை என்பது பற்றி அறியாமல் இருக்கும் அனுசரணையாளரை தொடர்ந்து இப்பணியில் வைத்திருக்க வேண்டுமா? என்பது பற்றி நோர்வே அரசாங்கம் தீர்மானித்தல் வேண்டும் என்று ஜே.வி.பியின் அரசியற்பீடம் விடுத்துள்ள அறிக்கையில மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-6)

## தரைவழிப் போக்குவரத்தில் ஆபத்து

# 4 உலங்கு வானூர்திகளை வழங்குமாறு யாழ். படை அதிகாரிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள படை உயர் அதிகாரிகள் தங்களது போக்குவரத்துக்கு உலங்கு வானூர்திகளை வழங்குமாறு இராணுவத் தளபதி லெப் ஜனரல் சரத் பொன்சேகாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக டிவின்சன்களுக்கு பொறுப்பாக இருப்பவர்கள மேஜர், கேணல், லெப்கேணல், தரங்களில் உள்ள அதிகாரிகள் தங்களது படை முகாம்களில் இருந்து பலாலி படைத்தலத்திற்கு செல்வதற்கு உலங்கு வானூர்திகளை வழங்குமாறு படைத்தலைமையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தரைப்பாதை ஊடாக போக்குவரத்தில் ஈடுபடும் போது குண்டுத்தாக்குதல்கள் தங்கள் மீது நடத்தப்படுகிறதாகவும் இதனால் தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய தேவையும் அவசியமும் இருப்பதால் யாழ். மாவட்டத்திற்கு நான்கு உலங்கு வானூர்திகளை வழங்குமாறு அவர்கள் சரத் பொன்சேகாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-4)

## தரம் -1ற்கு தேசியப் பாடசாலைகளில்

# மாணவர் அனுமதி ; 2 வாரங்களில் வேலைத்திட்டம் பூர்த்தியடையும்

(கொழும்பு)

தேசிப் பாடசாலைகளில் அடுத்த ஆண்டு தரம் ஒன்றுக்கு பிள்ளைகளை சேர்த்துக்கொள்வதற்கான திட்டம் இம் மாதம் முதல் இரண்டு வாரங்களிற்குள் பூர்த்தியடைந்துவிடும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளின் பெயர்கள் அடங்கிய பட்டியல்கள் ஏற்கனவே சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதிகள் தொடர்பாக தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனைகளும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அனுமதி கோரப்பட்ட பிள்ளையின் தகவல்கள் சரியானவையா என்பதை உறுதிப்படுத்துவதற்கான தேவையான சகல ஆவணங்களையும் நேர்முகப் பரீட்சைக்கு வரும்போது எடுத்துவருமாறு அதிபர்கள் மூலம் பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசியப் பாடசாலைகளில் அனுமதி பெறமுடியாத சிறுவர்களுக்கென புதிய ஆரம்ப பாடசாலைகள் திறக்கப்படஇருக்கின்றன என்றும் தெரிவிக்கபபட்டுள்ளது.

மேலும், ஏனைய ஆரம்பப் பாடசாலைகள் மாதிரிப் பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. (ற-7)





விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தின் 'போரும் சமாதானமும்' நூல் அறிமுகவிழா நேற்றுக் காலை கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நகழ்வில், பொதுச் சுடரினை தமிழீழ கல்விக் கழகப்பொறுப்பாளர் இளங்குமரனும், தமிழீழத் தேசியக் கொடியினை அரசியல்துறைப் பொறுப்பாளர். சு.ப.தமிழ்ச்செல்வனும் ஏற்றி வைத்தனர்.

வடமுனை போர்த்தளபதி கேணல் தீபன் நூலை வெளியிட்டு வைக்க, மாலதி படையணி தளபதி கேணல் விதுசா பெற்றுக்கொண்டார்.

தொடர்நது, மதிப்பீட்டுரைகளை ஆசிரியர் திரு நாவுககரசு மற்றும் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் கா.வே. பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்தினர். இந் நிகழ்வுக் காட்சிகளை படங்களில் காணலாம்.







ஆலோசனை நல்லதாய் இருந்தால் அதனை எவர் கூறினார் என்பது பற்றி கவலை கொள்ள வேண்டாம். -அப்துர் றஹீம்

வலம்புரி

## சமாதானத்தை வேண்டி நிற்கும் 2006 ஆம் ஆண்டின் முகிழ்ப்பு

இன்று 2006ம் ஆண்டின் முகிழ்ப்பு. புதுவருடத்தில் புதிய சிந்தனை ,புத்துணர்வு ,புதுப்பொலிவு ஆண்டின் மலர்வு மகிழ்வாக இருக்க வேண்டுமென்ற நினைப்பு ,நிறைவேற வேண்டுமென்ற ஆதங்கம்.

அந்த ஆதங்கத்தின் பார்வையைப் பார்க்கின்ற போது தெரிகின்ற தடைகள் துப்பாக்கிகளாகவும், சீருடைகளின் அணிவகுப்புக்களாகவே காட்சி தருகின்றன.

2004ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நடந்த ஆழிப்பேரலையின் அவலத்தால் 2005 ஆம் ஆண்டின் நுழைவாயில் கதவு கண்ணீருடனும் தளராத சோகத்துடனுமே திறபட்டது.

ஆழிப்பேரலை தந்த சோகத்தின் காலக்கடப்பு ஆண்டு ஒன்றாகி விட்ட நிலையில்;

2006 ஆம் ஆண்டின் நுழைவாயிலை எட்டிய போது 2005 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் மலரும் ஆண்டின் மகிழ்வை மறைத்து வைத்துள்ளது.

எங்கும் பயப்பீதி; என்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற உத்தரவாதமற்ற வாழ்வியல்; வேட்டுக்களின் சத்தங்கள் புத்தாண்டின் மலர்வுக்கு குதூகல வரவேற்பளிக்கும் சீன வெடிகளுக்கு சிறைபோட்டுள்ள பரிதாபம் இறைவா!

ஏன் இப்படி நம்நிலை?எப்போது தான் விடிவுகிடைக்கும் என்ற ஏக்கம். ஒரு நாட்டின் பிரஜைகளுக்கு இனப்பாகுபாடு, பேரினவாத சிந்தனைகளால் எத்தனை உயிர்கள் இந்த மண்ணில் வாழ முடியாமல் போயிற்று.

கௌதம புத்த பிரானின் போதனைகளோடு காவிதரித்து நடமாடும் பிக்குகள் கூட்டம்; கர்த்தரின் சிலுவையை கழுத்திலே சுமக்கும் அருட்தந்தையர்கள்; நேரம் தவறா தொழுகை நடத்தும் மௌலவிகள்;கொல்லான் புலாலை மறுத்து பிற உயிர்களுக்கும் தீங்கிளைக்கலாகாது என்னும் உயிரியல் கோட்பாட்டை நிஜ வாழ்வியலில் கடைப்பிடித்து, ஏனைய மதகுருமார்களுக்கும் முன் உதாரணமாக திகழ்கின்ற போதிலும்;

நாட்டின் அரசியல் சமுதாயத்தால் மதிப்பளிப்பதில் மறந்து விடப்பட்ட வேதமோதும் வேதியர்கள்,இப்படியொரு அறம்காக்கும் மதக்கூட்டமே இருக்கும்போது பெரும்பான்மை என்ற கோரப் பற்கள் சிறுபான்மை மீதும் பதம் பார்ப்பது எதற்காக?

பல்கலைக் கழகங்கள் ,புத்திஜீவிகள், அரசியல் விற்பன்னர்கள் இப்படியொரு அறிவியல் குழாம் இந்த மண்ணில் நடமாடும்போது தமிழ்மக்களின் உரிமையைப் பறிப்பது சிங்களத்திற்கு இருக்ககூடிய திருப்திதான் என்ன?


ஓ! இறைவா !அருட்பார்வை இலங்கைத் தீவிற்கு கிடைக்கட்டும். மலருகின்ற 2006 ஆம் ஆண்டில் சமாதானம் ஏற்படட்டும்.

தமிழினம் தலை நிமிர்ந்து வாழட்டும்.

உன் அருட்கருணையை வேண்டுகின்றோம் இறைவா!

# வாழ்க்கையில் நிறைவு காண்பதற்கு தீயசெயல்களிலிருந்து விலக வேண்டும்

மனிதன் புதியனவற்றை ஆக்கிக் கொள்வதிலும், கண்டறிவதிலும் முன்னேற்றம் கண்டுள்ளான். ஆனா லும் மனித வாழ்வில் நிறைவைக் காணமுடியாது உள்ளது. காரணம் "பிறரிடம் இரக்கம், சகோதர அன்பு, பரிவுள்ளம் மனத் தாழ்ச்சி கொண்டிருங்கள்'' (1பேதுரு 3:8) இந்தப் பண்புகள் மனிதனிடம் அருகிக் கொண்டே வருகின்றது. "தீமைக்குப் பதில் தீமை செய்யாதீர்கள், பழிச் சொல்லுக்கு பழிச் சொல் கூறாதீர்கள். மாறாக ஆசி கூறுங்கள்.



ஏனென்றால் கடவுள் வாக்களித்த ஆசியை உரிமையாக்கிக் கொள்வதற்கே அழைக்கப்பட்டிருக்கின்றீர் கள்'' என்று புனித பேதுரு குறிப்பி டுவது நோக்கத்தக்க தாகும். இன்றைய காலங்களில் நிகழும் நிகழ்வுகளில் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் நிறையவுண்டு. மனித நேயம் இல்லாத நிலையே கண்களில் காட்சி தருகின்றது.

பரமபிதா காட்டிய பாதை

### நேர்மையாளருக்கே இறை ஆசீர்

வாழ்க்கையில் நிறைவைக் காண்பதற்கு தீச்சொல்லில் நின்று, நம் நாவைக் காத்துக் கொண்டு வஞ்சகச் சொற்களில் இருந்து விலகி வாழும் போதே இறையாசீரைப் பெற்றுக்கொள்ள முடியும். "ஆண்டவரின் கண்கள் நேர்மையானவர்களையே நோக்குகின்றன" நீதியின் பொருட்டு துன்புற வேண்டி இருப்பினும் நீங்கள் பேறு பெற்ற வர்களே.இறைவனின் ஆசிமொழி களுக்கு பேறு பெற்றவர்கள்களாக வாழ நாமும் முற்பட வேண்டும்.

"இருட்டான நேரங்களில் தான் ஒளியை நோக்கி நம் கண்களைத் திருப்ப வேண்டும் சமுதாயம் அழிவுப் பாதையை நோக்கிச் சென்று கொண் டிருக்கும் பொழுது கற்றறிந்த தகை மைச் சான்றோர்கள் கண்களை மூடிக்கொண்டு இருக்கக்கூடாது. வீழ்ந்து கொண்டிருக்கும் சமுதா யத்தை நிலைநிறுத்தப் பாடுபட வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் இறைவனின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவே முடியாது.

### கீழ்ப்படிதலின் மேன்மை

மனித வாழ்வின் மகிழ்வும் நிறைவும் கீழ்ப் படிவான வாழ்க்கை யிலேயே தங்கி யுள்ளது.

"நீ கீழ்ப்படியக் கற்றுக்கொள்ளும் வரை உண்மை யான மனிதனாக முடியாது" என்று ராபர்ட்லீ என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். இறை மனிதர்களின் செய்தியும் உலகிற்காகத் தம்மையே அர்ப்பணித்து வாழும் அறிஞர்களின் செய்தியும் ஒத்திசைவான தன்மையுள்ளதாக இருப்பதைக் காண முடிகின்றது.

இன்றைய காலங்களில் பொறுப் பற்ற தன்மை மேலோங்கிக் காணப் படுகின்றது.சுயநலமும் வஞ்சக எண்ணங் களும் மனித மனங்க ளுக்குள் புகுந்துவிட்டன. இதனால் மனித செயல்களின் வெளிப் பாட்டிலும் வக்கிரமான நிலையே காணப்படுகின்றது. எளிமையான குழந்தை உள்ளத் தன்மையைக் காண்பது அரிதாக இருக் கின்றது.

### இறை குரலுக்கு செவிசாய்த்தல்

இயேசு பெருமானின் போதனை களோடு வாழ்வது கடினம். ஆனால் அப்படி வாழ்ந்தவர்களே இன்று புனிதர்களாகப் புகழப்படுகின்றார்கள். பகைவனை அன்பு செய் வது கடினமானது. பகைவனுக் காகச் செபிப்பது, ஏற்றுக்கொள்வது எல்லாம் கடினமானதாகும்.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ் விலும் எத்தனையோ சந்தர்ப் பங்களை இறைவன் தந்து கொண்டு இருக்கின்றான். நாம் அவற்றை உதாசீனம் செய்தோமானால் இறை வனின் ஆசீர்வாதங்களைப்பெற்றுக் கொள்ளமுடியாது. பாறைமீது கட்டப்படாத வீடுகள் எல்லாம் மழை, வெள் ளம் புயற்காற்றுக்கு அள்ளுண்டு போய் விடும்என்பதை இயேசு பெருமான் தாமே எச்சரித்துள்ளார்.

**யாழ்.ஜெயம்தாசன்**

ஒவ்வொரு நாளையும் பயனுள்ள காரியங்களைச் செய்வதிலும், பயனுள்ளவற்றை பார்ப்பதிலும், பேசுவதிலும் உட்படுத்துவோமா னால் எமக்குப் பகைவர்கள் என்று யாருமே இருக்கமாட்டார்கள் உல கத்தின் போக்குகள் மாற்றடையவும் மனித உள்ளங்கள் கடினத் தன்மை யிலும், பழிவாங் கலிலும் இருந்து விடுபடவும் இறைவனிடம் உருக்க மாகச் செபிப்பதுடன் அத் தன்மைகளில் இருந்து நாம் முதலில் விடுபடவேண்டும். □

# சகல இனமக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுக்கு இந்தியா பூரண ஒத்துழைப்பு வழங்கும்

## இலங்கை-இந்திய கூட்டறிக்கையில் தெரிவிப்பு

ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் நிறைவில் இந்தியாவும்,இலங்கையும் இணைந்து கூட்டறிக்கையொன்றை வெளியிட் டுள்ளன.

பிரிவினையற்ற ஜனநாயக இலங்கைக்குள் அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியானதும், மகிழ்ச்சிகரமானதுமான வாழ்க்கையை ஏற்படுத்தும் வகையிலான எதிர்கால இலங்கை குறித்து இந்தியா எதிர்பார்ப்புகளைக் கொண்டிருப்பதாக இந்தியாவும் இலங்கையும் இணைந்து நேற்றுமுன்தினம் மாலை வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதற்காக சகல தரப்பினரிடமும் விரிவான கலந்துரை யாடல் இடம்பெறவேண்டுமெனவும் அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு கிடைக்கும் அரசியல் தீர்வானது அதிகாரத்தை பரவலாக்குவதை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டு மென இந்தியா சுட்டிக்காட்டியுள்ளது.

அது வெளிப்படையாக மேற்கொள்ளப்பட வேண்டு மெனவும் இலங்கையின் இறைமை மற்றும் ஒருமைப்பாட் டைப் பாதுகாக்கும் தீர்வொன்றைக் காண வேண்டு மெனவும் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் பாதுகாப்பு மற்றும் ஐக்கியத்திற்காக இந்தியா தனது கவனத்தை செலுத்தியுள்ள நிலை யில் பிரிக்கப்படாத இலங்கைக்குள் சகல இன மக்க ளும்ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுக்காக இந்தியா தனது பூரண ஒத்துழைப்பை வழங்குமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் சமாதான செயற்பாடுகள் மூலம் கூடியளவிலான அதிகாரப் பரவலாக்கல் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் கூட்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.அத்துடன், இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையிலான அரசியல் பொருளாதார மற்றும் கலாசார தொடர்புகள் மிகவும் உயர்ந்த மட்டத்திலுள்ளது.

இலங்கையின் பாதுகாப்பு படைத்தரப்புகளுக்கு இந்திய அரசாங்கம் வழங்கும் இராணுவப் பயிற்சிகள் தொடர்ந்தும் வழங்கப்படுமென்று இந்தியாவுடன் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு வருடந்தோறும் மகாத்மா காந்தி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் கற்றல் வாய்ப்புகள் வழங்குதல், சேது சமுத்திரத் திட்டத் தினால் ஏற் படும் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக் குறித்து இரு நாட்டு நிபுணர்களும் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளல், சுனாமியினால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்ட புனரமைப் புக்கு இந்தியா உதவி வழங்குதல் என்பவற்றுடன் பருத்தித்துறை வைத்தியசாலை மற்றும் அம்பாந் தோட்டை வைத்தியசாலைகளின் புனர மைப்புக்கும் இந்தியா நிதியுதவி வழங் குவதோடு டிக்கோயாவில் புதிய வைத் தியசாலை ஒன்றை அமைக் கவும் இந்தியா நிதியுதவி வழங்க முன்வந் துள்ளது என அக்கூட்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-9,4)

## விடுதலைப் புலிகளின் நல்ல செய்தியை தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்கிறோம்

**-கண்டி ஆயர் வியானி பெர்னாண்டோ**

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் சமா தானத்துக்கான அக்கறையையும் அர்ப்பணிப்பையும் ஒரு நல்ல செய் தியாக தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்கிறோம் என்று கண்டி ஆயரும் ஆயர்கள் சங்கத் தலைவருமான வியானி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுடனான சந்திப்பை முடித் துக் கொண்டு ஊடகவியலளார்களுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள் ளார்.தென்னிலங்கையில் மறுபடியும் யுத்தம் ஏற்பட்டால் மக்கள் தான் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சம் உள்ளது எனவும் அவர் குறிப்பிட் டார்.


இதேவேளை, அங்கு கருத்துத் தெரிவித்த யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், தற்போது வடக்கு- கிழக்கில் ஏற்பட்டுள்ள நிலைமை களையும், மக்களின் அவலநிலை குறித்தும் ஆராய்ந்தோம்

அத்துடன் நாம் சில கோரிக்கைக ளையும் விடுதலைப் புலிகளிடம் முன்வைத்தோம்.தற்போது ஏற்பட் டுள்ள பதற்றத்தைத் தணிப்பதற் காக இராணுவத்தினர் மீதான தாக்குதலினை நிறுத்த வேண்டும். மக்களின் மத்தியில் நிலவுகின்ற பயத்தினை முற்றுமுழுதாக நீக்கு வதற்காக தற்போது செயலிழந்து போயுள்ள அரச நிர்வாகத்தை மீண்டும் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும், உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தை யினை ஆரம்பிப்பதற் கான நடவடிக்கை யில் விடுதலைப் புலிகள் இறங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டோம் என்றார்.

இவ்வாறானதொரு அழுத்தத் தினை அரசாங்கத்திற்கு மீண்டும் கொடுக்கவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ந-4)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



பலவீனப் பிண்டங்கள் யாரும் இந்தப் பாதையைப் பின்பற்ற முடியாது நான் ஆன்மா நான் சுதந்திரன் நான் கட்டுப்படவே இல்லை காலம் என்னில் இருக்கிறது நான் காலத்தில் இல்லை கடவுள் என் மனதிலிருந்து தோன்றினார். இப்படி கூறும் தைரியம். இருக்கவேண்டும்.

# வடக்குக் கிழக்கில் கடந்த மாதம் மட்டும் 55 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்

## இராணுவத்தரப்புத் தகவல்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் இராணுவத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் கடந்த மாதம் மட்டும் 55 இராணுவத்தினர் பலியாகியுள்ளதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் முதலாம் திகதியில் இருந்து 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 55 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 89 பேர் காயமடைந்துள்ளனர்.

இவற்றில் பெரும்பாலானவர்கள் கிளைமோர் தாக்குதலிலேயே கொல்லப்பட்டுள்ளதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்குக் கிழக் கில் கடந்த வியாழக்கிழமைமட்டும் 5 கிளைமோர்க் குண்டுகள் மீட்கப்பட்டதாகவும் அதன் மூலம் ஏற்படவிருந்த பாரிய உயிரிழப்புக்குள் தவிர்க்கப்பட்டதாகவும் இராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளைமோர்த் தாக்குதல்கள் அனைத்தும் விடுதலைப்புலிகளாலேயே மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர்கள் இதன் மூலம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளதாகவும் இராணுவத் தரப்புக் குற்றஞ் சாட்டியுள்ளது. (ச-ற)

# காயமடைந்த இரு சிப்பாய்கள் மரணம்

(யாழ்ப்பாணம்)

வரணி 524வது படையணி தலைமையகம் தாக்குதலில் படு காயமடைந்த 6 பேரில் இருவர் உயிரிழந்துள்ளதாக இராணுவச் செய்திகள் தெரிவிக்கின்றன.கடந்த வெள்ளிக்கிழமை இரவு வரணி 524வது படையணி தலைமையகம் மீது இனந்தெரியாதோரால் கைக்குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் 6 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த 6 பேரும் பலாலி இராணுவ மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இந்த ஆறு பேரில் இருவர் சிகிச்சை பலனளிக்காமல் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளனர். ஏனைய நால்வரின் நிலை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளதாக இராணுவத் தரப்புத் தெரிவித்ததாக கூறப்படுகின்றது. (ச-8)

# இலங்கை இளைஞரின் கைதையடுத்தே மகிந்தவின் தமிழகப் பயணம் இரத்தானது

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தமிழகப் பயணம் இரத்துச் செய்யப்பட்டமைக்கு சில பின்னணித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி இந்தியா செல்வதற்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னதாக சென்னையில் இருந்து தமிழ் இளைஞர் ஒருவர் போலிப் பாஸ்போட்டைப் பயன்படுத்தி இலங்கை செல்ல முற்பட்டபோது சென்னை விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்றும் அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டியிருக்கலாம் என்ற சந்தேகத்திலேயே மகிந்தவின் தமிழகப் பயணம் தமிழக அரசினால் இரத்து செய்யப்பட்டதாக தமிழக நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ச)

## இணுவிலில்...

ணுவத்தினரால் தாக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இணுவில் மத்தி, தியேட்டர் வீதி, காரைக்கால் அம்மன் கோவில் வரையிலான பகுதிகளே தேடுதலுக்குட்படுத்தப்பட்டுள்ளது. (ச-122)

## இளம்...

மேற்கொண்டதுடன்சடலத்தைமரண விசாரணைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-132,133)

# மரண அறிவித்தல்



## மனுவேற்பிள்ளை பற்றிக்இம்மானுவேல்

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும், சில்லாலை வடக்கு பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை பற்றிக்இம்மானுவேல் (31.12.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை மாகிறேற் தம்பதியரின் அன்பு மகனும், மேரி பியாற்றிஸ்(புனிதம்) அன்புக் கணவரும், விமல்ராஜ் விமல்(கனடா), சிறிசாந்தி(ஜினோ), பசில்ராஜ்(பசில்)(C.T.B) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சிறில் இம்மானுவேல் மற்றும் லோறன்ஸ் இம்மானுவேல், சூ.புலோமினா, இ.திரேசம்மா, ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மரியாம்பிள்ளை கபிரியேற்பிள்ளை, க.மரியம்மா தம்பதியரின் மருமகனுமாவார்.

அன்னாரது பூதவுடல் நாளை(02.01.2006) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சில்லாலை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சில்லாலை வடக்கு,
பண்டத்தரிப்பு.

தகவல்,
குடும்பத்தினர்.

C-050

## யாழ்.நகரப் பகுதி...

கள் மற்றும் வேலைத்தளங்களுக்குச் சென்றோர் பெரும் சிரமங்களுக்குள்ளானார்கள். இதேவேளை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிக்காகச் சென்ற ஆசிரியர்களும் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பு தேடுதலினால் பெரும் சிரமங்களுக்குள்ளாகினர்.

இராணுவத்தினரின் இச் சுற்றிவளைப்பு காரணமாக யாழ். நகரை அண்டிய பகுதிகளில் கல்வி நிலையங்களில் வகுப்புக்கள் இடம்பெறவில்லை.

மேலும் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பெனத் தெரியாது அப்பகுதிக்குள் நுழைந்த மாணவர்கள் இராணுவத்தினரின் பலத்த விசாரணைக்குப் பின்னே விடுவிக்கப்பட்டனர்.

இராணுவத்தினரின் இவ்வாறான நடவடிக்கையினால் நேற்றுக்காலை யாழ்.நகரப் பகுதி முழுவதும் பெரும் பதற்றமும் அச்சமும் நிலவியதுடன் மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை முற்றாகக் குழம்பியிருந்தது. (ற-39,132,133)

## கொழும்பில்...

அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

ஸ்ரேஞ்ச்நைட் 3 எனப் பெயரிடப்பட்ட இத்தேடுதல் வேட்டையின் போது800க்கும் மேற்பட்ட ஆண்களும் 100க்கும் மேற்பட்ட பெண்களுமென 1000க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டனர்.

கைதான இவர்கள் அனைவரும் 8பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டு தீவிரவிசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் 836 பேர் நேற்று மாலை விடுவிக்கப்பட்டனர்.

தொடர்ந்தும் ஏனையோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் கைதான அனைவரிடம் இருந்து கைவிரல் அடையாளம் பெறப்பட்டுள்ளதுடன் இவர்கள் அனைவரும் புகைப்படம் மற்றும் வீடியோக்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ந்தும் 53பேர் தீவிர பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை 15 பொலிஸ் பிரிவுகள் இணைந்து இத் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## விடுதலைப்புலிகளின் பதில்...

இந்திய விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி நாடு திரும்பு முன் விமான நிலையத்தில் இந்திய ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.கடந்த 27 ஆம் திகதி இந்தியா வுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி நேற்று முன்தினம் நாடு திரும்பினார்.

நாடு திரும்பும் வழியில் இந்திய விமான நிலையத்தில் பத்திரிகையாளர்களுக்கு தகவல் தெரிவிக்கையில்; சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு தயாராகவே இருக்கின்றது. அது குறித்து விடுதலைப்புலிகளுக்கும் அறிவித்துவிட்டோம். ஆனால் அவர்களின் பதில் கிடைக்கவில்லை. பதில் கிடைத்ததும் உடனடியாகப் பேச்சு க்களை ஆரம்பிப்போம். இதனை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

பேச்சுக்கள் ஆரம்பிக்கும் போது போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்தே முதலில் பேசுவோம். ஏனெனில் அதிலேயே அதிக குறைபாடுகள் இருப்பதாக அனைவராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது எனக் கூறினார்.அடுத்துவரும் பேச்சுக்களின் மூலம் நிரந்தரத்தீர்வு ஒன்றினைக் காண முடியும் எனவும் அதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனா திபதி கூறினார்.இதேவேளை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான இடப்பிரச்சினையே முக்கியப் பிரச்சினையாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (ச-8)

## அரச ஊழியர்...

ளப்பட்ட பணிப்புறக்கணிப்பின் போது எமக்கு ஆதரவினை நல்கிய பொதுமக்களுக்கும் வெகுஜன அமைப்புக்களுக்கும் எமது தோழமையுடனான நன்றியினை தெரிவிக்கின்றோம் எனக் கூறப்பட்டுள்ளது. (ச)

A/L-2008
கலை,
வர்த்தகப் பிரிவுகள்
ஜனவரி 7 சனி காலை 8 மணிக்கு
DMI
Jaffna
(049)

# இராசி பலன்

01.01.2006
(மார்கழி 17, ஞாயிற்றுக்கிழமை)
பிரதமை முற்பகல் 7.55மணிவரை
துதியை பின்னிரவு 5.46 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 3.24
இராகுகாலம் 4.56-6.26 மணிவரை
சுபநேரம் 9.26-10.56 மணிவரை
அமிர்தம்

- **மேடம்**: கடின முயற்சி, பிறர் உதவி, போசன சுகம், தெய்வசிந்தை.
- **இடபம்**: கட்டுப்பாடு, இடமாற்றம், புதிய முயற்சி, தந்தை வழி உறவு.
- **மிதுனம்**: வண் பகை, வேலைச்சுமை, காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு.
- **கடகம்**: தெய்வசிந்தை, பெருமையடைதல், காரிய சித்தி, சுபசெய்தி.
- **சிங்கம்**: சுபநிகழ்வு, செய்தொழில் விருத்தி, அறிஞர் சந்திப்பு, முயற்சி கைகூடும்.
- **கன்னி**: வியாபார வருத்தி, புத்திரரால் கவலை, காரிய தாமதம், தெய்வமேன்மை.
- **துலாம்**: கல்வியில் ஆர்வம், மாதாசுகம், முயற்சி தாமதம், மனப்பதற்றம்.
- **விருச்சிகம்**: உறவினர் உதவி, பிரயாண நன்மை, கூட்டு முயற்சி, போசனசுகம்.
- **தனுசு**: உணர்ச்சி வசப்படல், காரிய தடங்கல், உஷ்ணநிலை, பணவிரயம்.
- **மகரம்**: தெய்வசிந்தை, நல்லமுயற்சி, கற்பனை மிகுதி, சயனசுகம்.
- **கும்பம்**: பிரயாணம், தூரதேசச் செய்தி, உறவினர் சந்திப்பு, சுபசெலவு.
- **மீனம்**: காரிய அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி, தனலாபம், நல்லசெய்தி.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# கல்பதரு தினம்

ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் 'கல்பதருதினம்' இன்று கொண்டாடப்படவுள்ளது.கேட்டதைக் கொடுக்கும் கற்பகமரம் போல் பகவான் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர் பக்தர்களுக்கு அருள்புரிந்த இன்று ஸ்ரீராம கிருஷ்ண மடங்களில் 'கல்பதரு நாள்' சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.இன்று காலை 10.00 மணிக்கு அறநெறிப் பாடசாலை மாணவர்களுடனும், மாலை 4.30 மணிக்கு வாராந்த பஜனை நிகழ்வுடனும் இந்நிகழ்வு தாவடியி லுள்ள சேவாச் சிரமத்தில் நடை பெறவுள்ளது. (ற-7)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்
அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும்
14.01.2006 வரை விசேட கழிவு
மலிவு விற்பனை நீடிக்கப்பட்டுள்ளது
என்பதை அறியத்தருகின்றோம்
உடனே விஜயம் செய்யுங்கள்

லைடன் புடைவை நிலையம்
இல. 410, ஆஸ்பத்திரி வீதி
(பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம் T.P: 222 2381










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.01.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.